# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

27 NOVEMBER 2022 - SUNDAY

Pages - 11

E Paper - # 017 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK

E-mail: editor@newsplus.lk





**வைத்திய துறைக்கு தெரிவான இல்மா கௌரவிப்பு!**

05 »»

பேராசிரியர் ஜவாஹிருல்லா எழுதிய

## நபிகளாரின் சமூக உறவு நூல் வெளியீடு கொழும்பில்

தமிழ்நாடு சட்டசபை உறுப்பினரும், பிரபல பேச்சாளருமான பேராசிரியர் ஜவாஹிருல்லா எழுதியுள்ள

03 »»»

## இந்திய சுதந்திர தின நிகழ்வில் எகிப்து ஜனாதிபதி பிரதம அதிதி

2023 ஆம் ஆண்டின் இந்திய சுதந்திர தினத்தின் பிரதம அதிதியாக இந்திய பிரதமர்

03 »»»

# தென்கிழக்கு பல்கலையில் மருத்துவபீடம்

## அதுவே எனது பிரதான இலக்கு!





## அடுத்த வாரம் அங்கு விஜயம்!!

### புதிய வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடமொன்றை உருவாக்குவதே எனது பிரதான இலக்கு என தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது வேந்தராக நியமிக்கப்பட்டிருக்கும் பிரபல சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அடுத்த ஐந்தாண்டுக்கான வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த வாரமளவு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவுள்ள வேந்தர், தமது பிரதான இலக்கு பற்றி நியூஸ் பிளஸ்ஸுக்கு விளக்கமளித்தார்.

02 »»»



## அப்பியாசக் கொப்பிகள், உபகரணங்களின் விலைகள் விரைவில் குறையும்?

**அவசரப்பட்டு வாங்கி விடாதீர்கள்**

### கல்வியமைச்சர் சுசில்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அடுத்த வாரத்தில் பாடசாலை அப்பியாசப்புத்தகங்கள் மற்றும் உபகரணங்களின் விலை அதிகரிப்பு

02 »»»

## விகிதாசார தேர்தல் முறை அமுலில் இருக்க வேண்டும்

### அரசியல் கட்சிகள் விருப்பம்

விகிதாசார தேர்தல் முறையே தொடர்ந்து இருக்கவேண்டுமென அரசியல் கட்சிகள் அபிப்பிராயம்

தேர்தல் முறையில் மாற்றங்களை மேற்கொள்ளும் போது விகிதாசார தேர்தல் முறை தொடர்ந்து இருக்கவேண்டுமென நாட்டின் அநேக அரசியல் கட்சிகள்

03 »»»

## புதிய முதலீடுகள் குறித்து ஜப்பான் குழு பிரதமருடன் பேச்சு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கையில் சாத்தியமான புதிய முதலீடுகள் குறித்து கலந்துரையாடுவதற்காக எஸ்.எல்.டி.பியின் தலைவரும், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவையின் தவிசாளருமான கலாநிதி அன்வர் எம் முஸ்தபாவின் ஒருங்கிணைப்பில் ஜப்பானிய உயர்மட்ட தொழில்முனைவோர் குழுவொன்று பிரதமர் தினேஷ் குணவர்தனவை

02 »»»



## நஸீர், விஜேதாஸ, நிமலுக்கு மொட்டுக் கட்சி நெருக்குதல்


### குழு நிலையில் அமைச்சுக்களை தோற்கடிக்க முஸ்தீபு!

### மூன்று பேரும் பதவி இழக்கும் ஆபத்து!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பாராளுமன்றத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வரவு

02 »»»





## அடக்கு முறைகளுக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடிக்கும்

**சஜித் எச்சரிக்கை**

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அரசை பயங்கரவாதம், அரச மிலேச்சத்தனம், மற்றும் மக்களின் உரிமைகளையும், மக்களின் சுதந்திரத்தையும் தடுக்கவும், மனித உரிமைகளை மீறவும் முயற்சித்துக் கொண்டிருப்பதாகவும், அவர்கள் அதை தங்கள் தேசிய நிகழ்ச்சி நிரலின் முதன்மை அம்சமாக கொண்டு

03 »»»

## தென்னிந்திய பகுதிகளை இணைக்க புதிய விமான சேவை

### Fits Air துணைத் தலைவர்!



(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

சென்னைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புதிய விமான சேவைகளை தொடங்கும் திட்டமும், பயணிகளிடமிருந்து கிடைக்கும் வரவேற்பின் அடிப்படையில் சென்னை, மதுரை, கோவை, கேரளத்தில் திருவனந்தபுரம், கொச்சி உள்ளிட்ட தென்னிந்திய பகுதிகளை இணைக்கும்

02 »»»

## இந்த நாட்டின் முன்னேற்றத்துக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு மகத்தானது

### சூரா கவுன்ஸில் மாநாட்டில் எம்.எம். சுஹைர்



(ராபி சிஹாப்தீன்)

முஸ்லிம்கள் அன்று முதல் இன்று வரை நாட்டில் பற்றுடன் செயல்பட்டு வருகின்றனர்

02 »»»

Collaborate with...
SIYANE NEWS
www.siyanenews.com facebook.com/Siyanemediacircle twitter.com/SiyaneNews Siyane Media Circle
SIYANE MEDIA CIRCLE (PVT) LTD No. 41, Kahatowita, Veyangoda.
SIYANE Media Circle
SIYANE MEDIA CIRCLE
KAHATOWITA
GA 00213489
மாற்றத்தை நோக்கிய பயணம்

## இந்த நாட்டின்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

வந்துள்ளனர் தேவநம்பியதீச மன்னரின் காலத்தில் முஸ்லிம்கள் விவசாயத்திற்கு குளங்கள் கட்டுவதற்கு உதவியதாக வரலாற்று ஆசிரியர் கலாநிதி தேவராஜா அவர்கள் அவரது புத்தகத்தில் குறிப்பிடுகின்றார்கள் அன்று முதல் இன்று வரை முஸ்லிம் சமூகம் இந்த நாட்டுக்கு நிறைய பங்களிப்பு செய்த சமூகமாக காணப்படுகின்றது என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர் தெரிவித்தார்

ஈராண்டுக்கு ஒருமுறை நடக்கும் தேசிய சூரா சபையின் பொதுக்கூட்டம் இன்று (27) கொழும்பு அல்ஹிதயா கல்லூரி பஹார்டீன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது இதன்போது கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்

ஆரம்பத்தில் எல்.ரி.ரி.ஈ முஸ்லிம்கள் இருந்தார்கள் ஆனால் அவர்கள் இந்த நாட்டிலே பிரிப்பதற்கு தயாரான சமூகமாக முஸ்லிம்கள் இருக்கவில்லை என்ற காரணத்தினால் பின்னர் நீக்கப்பட்டார்கள், முஸ்லிம்கள் வடக்கிலிருந்து விரட்டப்பட்டார்கள், காத்தான்குடி பள்ளிவாயலில் ஒரே இரவில் 147 பேர் கொல்லப்பட்டார்கள், கிழக்கில் எண்ணிக்கையற்ற முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டார்கள்

1956இல் ஏற்பட்ட பிரச்சினையின் போது ஒரு தமிழ் குடும்பத்தை ஒரு மாத காலம் எங்கள் வீட்டில் பாதுகாத்து வைத்திருந்தோம் முஸ்லிம்கள் மக்களுக்கும் மற்றும் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களை பாதுகாத்தார்கள்.

1978 ஜேஆர் ஜெயவர்தன அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின் 1979இல் வடக்கிலுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பயங்கரவாத சட்டத்தை கொண்டு வந்தார் இதன் மூலம் பிரச்சினையை தீர்த்துக்கொள்ளலாம் என நினைத்தார்கள் இந்த சட்டம் நாட்டில் சமாதானத்தை கொண்டுவருவதற்கு பதிலாக 30 வருட கால யுத்தத்திற்கு காரணமாக இருந்தது

இது நாட்டை பாதாளத்தில் தள்ளியது இதற்கு ஆரம்பத்தில் இருந்தவர்களும் இறுதியாக இருந்தவர்களும் பொறுப்புக்கூற வேண்டும் அவர்கள் அன்று சிந்தித்து செயல்பட்டிருந்தால் இன்று பிச்சை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது

நாட்டில் மக்களுடைய கடமை என்ன ,ஆட்சியாளர்களின் கடமை என்ன பொறுப்பு என்ன எவ்வாறு கையாள வேண்டும் என்பது பற்றி சிந்திப்பது அவசியம், பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகள் அணுகப்பட்டிருந்தால் பிச்சை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

## அப்பியாசக்..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

குறித்து கல்வி அமைச்சு அடுத்த வாரத்தில் நிதி அமைச்சோடு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

பாடசாலை உபகரணங்களும் அப்பியாசப் புத்தகங்களும் மலைபோல் உயர்ந்திருப்பது சம்பந்தமாக பரவலாகக் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ள நிலையிலே கல்வி அமைச்சர் இது தொடர்பாக திரைசேரி அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த இருக்கின்றார்.

பாடப் புத்தகங்களையும் பாடசாலை உபகரணங்களையும் குறைந்த விலையில் விற்பது தொடர்பாக பல்வேறு மட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இது சம்பந்தமாக ஒரு நல்ல தீர்மானத்தை அடுத்த வாரத்தில் எடுக்கப் போவதாகத் தெரிவித்தார்.

அரச அச்சுக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக 40மூ விலை குறைவில் பாடசாலை அப்பியாசப் புத்தகங்களை விற்பனை செய்வது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

டொலரின் விலையேற்றம் காரணமாக பாடசாலை உபகரணங்களும் பாடப் புத்தகங்களும் மலைபோல் உயர்ந்திருப்பதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகிறார்கள்.

அண்மைக்காலமாக பாடசாலை உபகரணங்கள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்திருப்பதன் காரணமாக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள்.

இதேநேரம், இந்தியாவில் இருந்து கடன் அடிப்படையில் இருபது மில்லியன் டொலர் பெறுமதியான அச்சுத்தாள்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

11 மில்லியன் புத்தகங்கள் இவ்வாண்டு அச்சடிக்கப்பட உள்ளதாகவும் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

எனவே, பெற்றோர்கள் அவசரப்பட்டு கூடிய நிலையில் பாடசாலை உபகரணங்களையோ, அப்பியாச புத்தகங்களையோ வாங்குவதைத் தவிர்ந்து கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

## தென்கிழக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

**தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு ஒரு மருத்துவபீடம் கட்டாயம் தேவை. இதனை உருவாக்கும் பணிகளை நான் இப்போது ஆரம்பித்துள்ளேன். இன்னும் சில நாட்களில் இலங்கைக்கு வரவுள்ள முஸ்லிம் நாடுகளின் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரோடும் உரையாடவுள்ளேன். அத்தோடு அரசாங்கத்தோடும் உரையாடி வெளிநாட்டு உதவிகளையும் பெற்று இந்த மருத்துவபீடத்தை உருவாக்க செயற்பட்டு வருகிறேன். மருத்துவபீடத்துக்குத் தேவையான போதனா வைத்தியசாலையாக முன்னாள் ஆளுனரான ஹிஸ்புல்லாவினால் நிர்மாணிக்கப்பட்ட பல்கலைக்கழக கட்டிடத்தை பெறுவது தொடர்பாகவும் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன் என்றும் வேந்தர் பாயிஸ் முஸ்தபா தெரிவித்தார்.**

## நஸீர்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

- செலவுத்திட்ட குழுக்கள் மீதான விவாதத்தின் போது அரசாங்கம் நெருக்கடியை எதிர்நோக்கி இருப்பதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்று அமைச்சர்களது நிதி ஒதுக்கீடுகளை தாம் ஆதரிக்கப் போவதில்லை என மொட்டுக் கட்சி குழு ஒன்று தெரிவித்து வருகின்றது.

துறைமுக கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் நிதி ஒதுக்கீடு அதேபோன்று நீதி சிறைச்சாலை விவகார, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் நிதி ஒதுக்கீடு, சுற்றாடல் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடுக்கும் தான் ஆதரிக்கப் போவதில்லை என மொட்டு கட்சியினர் தீர்மானித்துள்ளனர்.

இந்த மூன்று அமைச்சர்களும் தங்களது நலன்களை கவனிப்பதில் அக்கறை இல்லாமல் செயற்பட்டது குறித்து ஆட்சேபனை தெரிவிக்கவே இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர்.

சுற்றாடல் அமைச்சின் நிதி ஒதுக்கீடு இரண்டாம் திகதி இடம் பெறவுள்ளது. துறைமுக கப்பல் போக்குவரத்து அமைச்சின் நிதி ஒதுக்கீடு ஐந்தாம் திகதியும் அதே தினம் நீதி சிறைச்சாலை விவகார அரசியல் அமைப்பு விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

இந்த விவாதத்தில் குறிப்பிட்ட மூன்று அமைச்சிக்களின் நிதி ஒதுக்கீடுகள் தோல்வி அடைந்தால் அமைச்சர்கள் இராஜினாமா செய்ய நிப்பந்திக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## தென்னிந்திய..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

வகையிலும் புதிய விமானசேவைகள் இயக்கப்படும் என்று இலங்கையின் 'ஃபிட்ஸ் ஏர்' நிறுவன துணைத் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான பீட்டர் ஹில் தெரிவித்தார்.

இதுகுறித்து திருச்சியில் இலங்கையின் 'ஃபிட்ஸ் ஏர்' நிறுவன துணைத் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான பீட்டர் ஹில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது:

இலங்கையின் 'ஃபிட்ஸ் ஏர்' என்ற தனியார் விமான நிறுவனம், டிசம்பர் 8 ஆம் தேதி முதல் திருச்சி - கொழும்பு இடையே தனது முதல் விமான சேவையைத் தொடங்க உள்ளது. முதல்கட்டமாக வியாழன், சனி, ஞாயிறு என வாரத்தில் 3 சேவைகளை வழங்க திட்டமிட்டுள்ளது.

தற்போது தொடங்கப்படவுள்ள விமான சேவைகளுடன் திருச்சி மற்றும் சென்னைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புதிய விமான சேவைகளை தொடங்கும் திட்டமும், பயணிகளிடமிருந்து கிடைக்கும் வரவேற்பின் அடிப்படையில் சென்னை, மதுரை, கோவை, கேரளத்தில் திருவனந்தபுரம், கொச்சி உள்ளிட்ட தென்னிந்திய பகுதிகளை இணைக்கும் வகையிலும் புதிய விமானசேவைகள் இயக்கப்படும். அடுத்தாண்டுக்குள் இந்த சேவைகள் வழங்கப்பட வாய்ப்புள்ளது.

இந்தியாவில் உள்ள மற்ற விமான நிலையங்களுடன் ஒப்பிடுகையில், திருச்சி-இலங்கை இடையே பயணிகள் அதிகரித்து வருவதால் விமான சேவைகளும் அதிகரிக்க வேண்டியுள்ளது. திருச்சியை எங்கள் வரைபடத்துடன் இணைப்பதன் மூலம் இந்தியாவுடனான முதல் சேவையை தொடங்கியுள்ளோம் இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது, 'ஃபிட்ஸ் ஏர்' நிறுவன மேலாளர் (சென்னை) ஜி. கிருஷ்ணன், பொது விற்பனைப் பிரிவு முகவர் பி.திலக், திருச்சி விற்பனைப் பிரிவு மேலாளர் எஸ்.அபிராமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

திருச்சி -கொழும்பு இடையே தற்போது தினமும் ஒரு சேவை என்ற வகையில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் வாரம் 7 சேவைகளை வழங்கி வருகிறது. மேலும் தற்போது 'ஃ பிட்ஸ் ஏர்' வாரம் 3 சேவை என தொடங்கவுள்ள நிலையில் வாரம் 10 சேவைகள் திருச்சி- கொழும்பு இடையே இயக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

பாராளுமன்றத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தது.

தூதுக்குழுவில் ஜப்பானின் அரச குடும்ப உறுப்பினரும் டோக்கியோ பெருநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான திருமதி சைகோ அயுமி மற்றும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு புகழ்பெற்ற சான் பிரான்சிஸ்கோ மாநாட்டில் ஜப்பானுக்கு ஆதரவு தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவால் வழங்கப்பட்ட ஆதரவிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவுக்கு ஜப்பானில் நினைவுச்சின்னத்தை நிர்மாணித்த தொழில்முனைவோர் குடும்பத்தைச் சேர்ந்த திரு கமிசகமோட்டோ யுஜி மற்றும் திருமதி கமிசகமோட்டோ ஹிசாகோ ஆகியோர் பிரதமருடனான இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்கு ஜப்பானுக்கு நன்றி தெரிவித்த பிரதமர், விவசாயம், மீன்பிடி, மோட்டார் வாகன உதிரிபாகங்கள், மருந்து மற்றும் விருந்தோம்பல் தொழில் போன்ற புதிய துறைகளில் முதலீடு செய்யுமாறு ஜப்பான் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்தார். இருதரப்பு உறவுகளை மேலும் ஆழமாக்குவதற்கும் விரிவுபடுத்துவதற்குமான வாய்ப்புகளை ஆராய்வதற்கு இலங்கை திறந்திருப்பதாகவும், அதிக வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பால் மட்டுமல்லாமல், ஜப்பானிய மொழி கற்பித்தல் உள்ளிட்ட கல்வித் துறை பற்றியும் அக்குழுவுக்கு விளக்கினார். மேலும் ஜப்பானிய நிறுவனங்களை இலங்கையில் முதலீடு செய்ய ஊக்குவிப்பதாக தூதுக்குழுவினர் பிரதமருக்கு உறுதியளித்தனர்.

ஜப்பானிய மொழியில் வெளியிடப்பட்ட ஜே ஆர் ஜெயவர்த்தனா பற்றிய புத்தகத்தை திரு கமிசகமோட்டோ பிரதமரிடம் வழங்கினார். பின்னர் மறைந்த ஜனாதிபதி தொடர்பிலான புத்தகத்தை முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் பேரன் பிரதீப் ஜெயவர்த்தனவிடமும் கையளித்தார்.

இந்த தூதுக்குழுவில் சடோஷ் ரியோசுகே, ஜைடோ ஆயா, யமடா ஹிரோகோ, நகாடே ரியோஷ ின், நோஸ் ஹிரோஷி, செட்டோ தட்சுஹிகோ, கவாய் தோஷிஹிகோ, மியுரா யோசுகே, சுசுகி நட்சுவோ, எப். ஆர்.சுலைமான், டான்கா டாரோ, சடோ இச்சிரோ மற்றும் இகேடா கவுட்சு ஆகியோருடன் பிரதமரின் மேலதிக செயலாளர் ஹர்ஷ விஜேவர்தன, எஸ்.எல்.டி.பியின் தலைவரும், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவையின் தவிசாளருமான கலாநிதி அன்வர் எம் முஸ்தபா, காத்தான்குடி நகரசபை உறுப்பினர் கலாநிதி சல்மா அமீர் ஹம்ஸா ஆகியோர் கலந்துகொண்டனர்.




## அடக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

வர முயற்சிக்கிறார்கள் எனவும்,பாராளுமன்றத்தில் கூட ஒரு பொது மக்கள் போராட்டம் நடந்தால்,பாதுகாப்புப் படையினரைப் பயன்படுத்தி,பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அடக்க முற்பட்டாலும்,அதற்காக எந்நேரத்திலும் அஞ்சத் தயாராக இல்லை எனவும்,குடிமக்கள் என்றாலும் கோழைகளாக இல்லாது தைரியமாக துணிச்சலாக செயற்படுவதால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த அடக்குமுறைகளுக்கு மக்கள் அஞ்ச மாட்டார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வீதிகளில் ஆர்ப்பாட்டம் அல்லது அமைதிப் பேரணி நடத்த அனுமதி பெற வேண்டும் என அரசாங்கம் கூறினாலும் கூட, அரசாங்கம் சொல்வதை விட உயர்வான சட்டம் இருப்பதால்,அரசாங்கத்தின் தன்னிச்சையான தலையீட்டை சவாலுக்குட்படுத்துவதற்காக இலட்சக்கணக்கான மக்களுடன் கூடிய விரைவில் வீதியில் இறங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் சக்தியால் அமைதியான முறையில் அரச கொடூரம் தோற்கடிக்கப்படும் எனவும், எந்த சூழ்நிலையிலும் அரசு சொத்துக்கள்,வீடுகள் அல்லது வேறு எதுவும் அழிக்கப்படாது எனவும்,நாடாளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில் தம்பட்டம் அடிக்கும் குறித்த நபர்கள்,மக்கள் முன் வாயை மூடிக்கொண்டு இருப்பது மக்கள் நிராகரிப்பதனால் எனவும் தெரிவித்தார்.

தற்போதுள்ள திரிபு நிலை அரசாங்கத்தை மாற்றியமைத்து நாட்டை ஸ்திர நிலைக்கு மீட்டெடுக்கும் வகையில் தேர்தலின் அவசியத்தை இதன் போது வலியுறுத்திய எதிர்க்கட்சித் தலைவர்,நாட்டில் நடைமுறையிலுள்ள மேலான சட்டம் தொடர்பாக அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன்,எதிர்வரும் கிட்டிய காலங்களில் மக்களின் ஆணையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் ஏற்படும் எனவும்,அந்நேரத்தில் இந்த திரிபுபடுத்தப்பட்ட அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பப்பட்டு,

மக்களின் அரசாங்கமொன்றை ஐக்கிய மக்கள் சக்தி ஸ்தாபிக்கும் எனவும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

காதினாலுக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த வாக்குறுதியின் மூலம்,எந்த சர்ச்சையும் அல்லது செல்வாக்கும் இல்லாமல் தேசிய மற்றும் சர்வதேச நம்பகத்தன்மை கொண்ட விசாரணையொன்று ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக நடத்தி, இதற்கு காரணமான குற்றவாளிகள் எந்தத் தரத்தில் இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி நியாயம் கிடைக்க முன் நிற்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், சிலர் தனக்கு எதிராக போலி மற்றும் சேறு பூசும் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாகவும்,இதற்கு தாம் ஒருபோதும் சளைக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் பணத்தைக் கொள்ளையடித்த திருடர்கள் இன்று தமக்கு எதிராக சேறு பேசுகின்றனர் என தெரிவித்த

எதிர்க்கட்சித் தலைவர்,மத வழிபாட்டுத் தலங்களை கட்டுவதற்கு பணம் செலவழிப்பதை கொள்ளையடிப்பதாக அவர்கள் கருதுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

தான் பிரேமதாஸவின் மகன் என்பதை நினைவுகூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர்,தான் மக்களின் பணத்தில் ஒரு சதத்தையேனும் திருடவில்லை என்பது முழு நாட்டிற்கும் தெரியும் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நீர்கொழும்பு தேர்தல் தொகுதிக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று (26) நடைபெற்றது.இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நீர்கொழும்பு தேர்தல் தொகுதி அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்தனவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## நபிகளாரின்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

நபிகளாரின் சமூக உறவு நூல் வெளியீடு எதிர்வரும் 09ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கொழும்பு தபால் அமைச்சின் கேட்போர் கூடத்தில் முஸ்லிம் கவுன்சிலர் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் இடம்பெறும். வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில், சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், அகில இந்திய யூனியன் ஒப் முஸ்லிம் லீக்கின் தலைவர் பேராசிரியர் காதர் முஹைதீன் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொள்வார் என முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பு இப்திகார் தெரிவித்தார்.

## இந்தியா...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

நரேந்திர மோடி எகிப்தின் ஜனாதிபதி பதாஹ் எல் ஸிஸி அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எகிப்துக்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக இந்திய வெளிவிகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.இந்திய சுதந்திர தினம் 2023 ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

**வாசகர்களே!**

**இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது. உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.**

**editor@newsplus.lk**




## விகிதாசார...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்துள்ளன.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் இயங்கிய பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கையில் அநேக அரசியல் கட்சிகள் விகிதாசார தேர்தல் முறை தொடர்ந்து இருக்க வேண்டுமென கையொப்பமிட்டிருப்பதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்பிருந்த தொகுதி வாரி தேர்தல் முறைமை பாராளுமன்றத்திலும், மாகாண சபையிலும் இருக்க வேண்டுமென்று அநேக கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இதேநேரம் இம்மாதம் 28 ஆம் திகதி உள்ள10ராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதா இல்லையா என்பது பற்றி தேர்தல் ஆணைக்குழு தீர்மானமெடுக்கவுள்ளது.






# அரங்கம்

### 134ஐ பெற்று ஜனாதிபதியான ரணிலுக்கு பட்ஜெட்டில் கிடைத்தது 120தே!

எதிர்க்கட்சியில் இருந்தும் பட்ஜெட்டுக்கு ஆறு பேர் ஆதரவு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவு பெற்றது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 120 வாக்குகளும், எதிராக 84 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 134 பாராளுமன்ற உறுப்பினர்களது ஆதரவை பெற்று ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சராக சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்திற்கு 120 வாக்குகளே கிடைத்தது. அரசாங்கத்தின் செல்வாக்கு படிப்படியாக குறைந்து வருவதினையே இந்த வாக்கெடுப்பு காட்டுகின்றது. தமிழ்த் தரப்பில் ஓய்வு பெற்ற நீதியரசர் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் பேணுவதாக அனுர தெரிவித்திருந்தார். அதனை மறுத்துரைத்த ரணில், புத்த தர்மத்தின் அடிப்படை கருத்து□□□. மீண்டும் தனது அரைக்கு போகும் வழியில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அனுரவுக்கு அளித்த பதில் பற்றி கேட்ட போது விளக்கமளித்தார்.

பௌத்த தர்மப்படி வேதனையில்லாமல் செய்வதே முக்கியம். இப்போது மக்களின் துன்பங்களை நீக்குவதற்கு நாம் முன்னுரிமை அளிக்கவேண்டுமென ரணில் தெரிவித்தார். புதனன்று பட்ஜெட் மீதான குழு நிலை விவாதம் ஆரம்பமானது. அரகலைய போராட்டம் பற்றியும், வன்செயல்கள் புரிவது பற்றியும் ரணில் கடுமையான கருத்துக்களை தெரிவித்தார். தான் ஒரு சர்வாதிகாரி என்றும், கடந்த காலங்களில் சர்வாதிகாரி போன்று செயற்பட்டு பல சட்டங்களை நிறைவேற்றியதாகவும் தெரிவித்தார். பாராளுமன்றத்தை தான் கலைக்கப்போவதில்லை எனத் தெரிவித்த ரணில், உரிய காலம் வரை பாராளுமன்றம் இயங்குமென்றும் தெரிவித்தார். அப்போது அரச தரப்பிலே போதும் பதிலெதுவும் கூறவில்லை.

ரணில் அன்று முழு நாளும் பாராளுமன்றத்தில் தங்கியிருந்தார். அப்போது பாதுகாப்பு அமைச்சின் விவாதத்தின் பின் வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டுமென கஜேந்திர குமார் பொன்னம்பலம் கோரியிருப்பதாக ரணிலிடம் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக சபை முதல்வர் மற்றும் பிரதம அமைப்பாளருடன் தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவ சபை கூட்டம் நடைபெற்றது. எதிர்காலத்தில் தேர்தல்கள் நடைபெறவிருப்பதால் அதற்காக தயாராகுமாறு ஜனாதிபதி கட்சி முக்கியஸ்தர்களை கேட்டுக் கொண்டார்.

### அமைச்சரிடம் மன்னிப்புக் கேட்ட சபாநாயகர்

புதனன்று பாராளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத்,

## தான் ஒரு சர்வதிகாரி என்கிறார் ரணில்!

வாக்களிப்பின் போது சபையில் இருந்த போதிலும், வாக்களிப்பில் பங்குபற்றுவதில்லை என அறிவித்தார். வழமையாக பட்ஜெட்டை எதிர்த்துவரும் தமிழ்த் தரப்பினர் இம்முறை எதிர்ப்புத் தெரிவிக்காது வாக்கெடுப்பின் போது சபையில் பிரச்சனமாகியிருக்கவில்லை. தமிழ்த் தரப்பினருக்கும், ஜனாதிபதிக்கும் இடையே தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் உத்தியோக பற்றற்றவகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே ஜனாதிபதியின் பட்ஜெட்க்கு எதிர்ப்பு தெரிவிக்காது பச்சை சமிக்ஞையை காட்டும் முகமாகவே தமிழர் தரப்பினர் வாக்கெடுப்பிலிருந்து தவிர்ந்து கொண்டதாக சில அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். ஏன் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்பதற்கு தமிழ் தரப்பில் நியாயமாக காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.

எதிர்க்கட்சி தரப்பிலிருந்த ஆறு பேர் பட்ஜெட்டுக்குக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் துமிந்த திசாநாயக்க, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன, இ.தோ.க. தலைவர் ஜீவன் தொண்டமான், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜயரத்ன, இ.தோ.க. பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன் ஆகிய ஆறு பேருமே எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்து அரசுக்கு ஆதரவு தெரிவித்தனர். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே வாக்களித்தவர்களில் முக்கியமானவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த துமிந்த திசாயநாயக்க. இவர் வாக்களித்த மறுகணமே இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நவலங்கா கட்சியின் தலைவர் குமார வெல்கம பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களித்தார். தமிழ்த் தரப்பை சேர்ந்த 10 உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை. தமிழர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பட்ஜெட் வாக்கெடுப்புக்கு முதல் நாள் செய்தியாளர் மாநாடொன்றை நடாத்தி தமது கட்சி வாக்களிப்பில் கலந்து கொள்ளாதென தெரிவித்தார்.

### தேர்தலுக்கு தயாராகும் படி சிறிகொதவுக்கு ஜனாதிபதி ஆலோசனை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கில் மூன்று நாற்கள் வியஜமொன்றை மேற்கொண்டு சென்றிருந்த நிலையில், செவ்வாயன்று பாராளுமன்றத்துக்கு வருகை தந்தது வரவு - செலவு திட்ட விவாதத்தில் கலந்து கொள்வதற்காகும். ஜனாதிபதி பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்கும் போது ஜாதிக ஜனபலவேகவவின் தலைவர் அனுர குமார திசாநாயக்க உரையாற்றிக் கொண்டிருந்தார். அனுர பேசுவதை தனது அரையிலிருந்து அவதானித்த ரணில், தனது அரைக்குள் தன்னை சந்திக்க வந்தவர்களை சற்று தாமதிக்குமாறு கூறி சபைக்கு பிரவேசித்தார். அனுரவின் உரையை செவிமடுத்த ரணில் புத்த தர்மம் பற்றி அவர் சொன்ன ஒரு கூற்றுக்கு பதிலளித்தார். புத்த தர்மம் சமத்துவத்தை பலத்த கரகோஷம் தெரிவிக்கப்பட்டு அக்கருத்தை வரவேற்றனர். ரணில் தனது உரையில் "டீன் டியாமி" பற்றி குறிப்பிட்டிருந்தார். அநேகருக்கு டீன் டியாமி என்றால் என்னவென்று தெரிந்திருக்கவில்லை. உறுப்பினர்கள் பலரும் ஜனாதிபதியிடம் டீன் டியாமி பற்றி விளக்கம் கேட்டார்கள். இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத்தும் அங்கிருந்தார்.

சேர் டீன் டியாமி என்பது என்ன என்று சாமர சம்பத் கேட்டார். சாமர சம்பத்தின் கேள்விக்கு எல்லோரும் சிரித்தார்கள். டீன் டியாமி என்பவர் ஒரு சர்வாதிகாரியா என பேராசிரியர் ஆ.சு.மாரசிங்க, ஜனாதிபதியின் முகத்தை பார்த்துக் கேட்டார். செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் அங்கிருந்தனர். தென் வியட்நாமில் அன்றைய அரசை அகற்றிவிட்டு அதிகாரத்துக்கு வந்தவர் தான் டீன் டியாமி. அமெரிக்கப் படையின் ஆதரவுடன் இவர் செயற்பட்டார். 1960களில் தான் இவர் அதிகாரத்துக்கு வந்தார். ஆனால் இவர் அப்போதே பேராயருடன் இணைந்து பெரும் தொகையான பௌத்த பிக்குகளை கொன்றார். விடிபீடியாவில் இது தொடர்பான தகவல்கள் நிறைய இருக்கின்றன தேடிப் பாருங்கள் என்று ஜனாதிபதி கூறினார். அதன் பிறகு லாபம் ஈட்டும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வதாக பேசப்பட்டது. ஜனாதிபதி மாளிகையில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஜனாதிபதியிடம் இதுபற்றி கேள்வி எழுப்பினார். டெலிகொம் நிறுவனம் இலாபமீட்டும் ஒரு நிறுவனமென இவர்கள் பொய் கூறுகிறார்கள். அரசியல் இலாபத்துக்காக பொய் சொல்கிறார்கள். பாதுகாப்பு அமைச்சின் குழு நிலை விவாதத்தில் பேசிய ரணில், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்தார். பாதுகாப்புப் படையினரும், பொலிஸ ாரும் நாட்டைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் போது அவர்கள் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### பால் கொடுக்க தயாராகும் பாராளுமன்றம்

அத்தினம் மாலை பாராளுமன்றத்துக்கு ஜனாதிபதி வந்தபோது பாராளுமன்றத்தின் படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னான்டோ ஜனாதிபதியை சந்திப்பதற்கு அவரது அறைக்கு வந்திருந்தார். பாராளுமன்றத்தை பார்ப்பதற்கு வரும் மாணவர்களுக்கு ஒரு கிளாஸ் பால் வழங்குவது பற்றி ஜனாதிபதிக்கு விளக்கினார். அதற்கான ஒதுக்கீடுகளை எப்படிப் பெறுவதென்பதே படைக்கள சேவிதரின் கேள்வியாக இருந்தது. ஜனாதிபதி நிதியத்திலிருந்து தேவையான பணத்தை வழங்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை தெரிவித்தார்.

### ஜனாதிபதிக்கு பட்டர் பூசிய பிரசன்ன

இச்சந்தரப்பத்தில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ மாளிகைக்கு வருகை தந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சேர் நேற்று ஆற்றிய உரை எங்கள் தரப்பினருக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்துள்ளது. பொருளாதார ரீதியாக நாட்டைக் கட்டியெழுப்ப முற்படும் போது நாட்டை சீர்குழைப்பதனை மக்கள் அங்கீகரிப்பதில்லை. ஜனாதிபதி அதனை கேட்டு புன்சிரிப்பை மேற்கொண்ட சபாநாயகருடன் வாக்குவாதப்பட்டார். தன்னை பாராளுமன்ற உறுப்பினர் என அழைப்பது பிழையானது என சாமர சம்பத் சபாநாயகருக்கு குற்றம் சாட்டியதோடு, நீங்கள் உங்களது வேலைகளை சரியாகச் செய்வதில்லை என்றும் கூறினார். நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அல்ல. நான் ஒரு அமைச்சர். ஜனாதிபதி எனக்கு அமைச்சர் பதவியொன்றை தந்திருக்கிறார். ஆகவே என்னை அமைச்சர் என்றே கூறுங்கள் என்றார். சபாநாயகர் சிரித்துக் கொண்டே 'சரி அமைச்சரே' என்று வியத்துக் கூறினார்.

அடுத்த நாள் பாராளுமன்றத்தில் இச்சம்பவத்தை பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுப் பேசும் போது, சபாநாயகர் மன்னிப்புக் கேட்டது தவறானது என்று குறிப்பிட்டார். பாராளுமன்றத்துக்குத் தெரிவான 225 பேரும் எந்தப் பதவி வகித்தாலும் பாராளுமன்ற உறுப்பினர்களே என்று அவர் தெரிவித்தார்.

### பிரதமர் பதவி கேட்டு தான் ராஜபக்ஷாக்களிடம் மண்டியிடவில்லை என்கிறார் சஜித்

வியாழனன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு வந்துவிட்டு இப்போது வேறு எதனையோ பேசுகிறார் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் பதவி கேட்டு தான் ராஜபக்ஷ ாக்களிடம் மண்டியிடவிடவில்லை என்றும், அவர் வேண்டுகோள் விடுத்ததன் காரணமாகவே அதற்கு பதிலளித்தாகவும், எமது கட்சியில் உள்ள கூட்டு கட்சிகளெல்லாம் இணைந்தே முடிவெடுத்தாகவும் குறிப்பிட்டார். தான் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியை மாத்திரம் வாசித்து விட்டு ஜனாதிபதி அரசியல் இலாபம் தேட முற்படுகிறார் என்று குறிப்பிட்டார். நிபந்தனை இல்லாமல் பதவிகளை தான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும், அவ்வாறான பதவி ஆசையுள்ளோர் அவ்வாறு செயற்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

### பஷிலின் காலில் மண்டியிட்ட மொட்டுக் கட்சி எம்.பிக்கள்

இவ்வாரம் இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளில் ஒன்று பஷ ில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்ததாகும். ஜனவரி மாதம் நாடு திரும்புவதற்கு இருப்பதாக அறிவித்திருந்த அவர், ஒரு மாதத்திற்கு முன்னரே கடந்த வார இறுதியில் நாடு திரும்பினார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் மொட்டுக் கட்சியினர் திரண்டு வந்து அவரை வரவேற்றனர். சில எம்.பிக்கள் அவரின் காலில் மண்டியிட்டு வணங்கியதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. பஷில் ராஜபக்ஷவை வரவேற்பதற்கு விமான நிலையத்திற்கு வந்தவர்களில் முன்னாள் பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் அணைக்குழுவின் தலைவருமான சந்திரா பெர்னாண்டோவும், மற்றுமொரு உறுப்பினரும் அங்கு வருகை தந்திருந்தமை ஊடகங்களில் பிரதான அவதானத்தை எடுத்திருந்தது. நடுநிலையாக இயங்க வேண்டிய ஜனாதிபதி ஆணைக்குழு முக்கியஸ்தர்கள் இவ்வாறு ஒரு கட்சி முக்கியஸ்தரை வரவேற்றது பலத்த விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. ஆணைக்குழுக்களை உருவாக்குவதில் கடந்த காலங்களில் முக்கிய பங்கு வகித்த முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய இச்சம்பவத்தை கண்டித்து அறிக்கையொன்றை விடுத்ததோடு, பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலருந்து இவரை உடனடியாக நீக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பஷிலை வரவேற்க வந்த நூ ற்றுக்கும் மேற்பட்ட மொட்டுக் கட்சி ஆதரவாளர்களுக்கு விமான நிலையத்தில் சிற்றுண்டி உபசாரம் அளிக்கப்பட்டது. இதற்கான சுமார் 60 ஆயிரம் ரூபா செலவாகியிருந்தது. யாரும் இப்பணத்தை செலுத்த முன்வராத நிலையில் சிவில் விமான போக்குவரத்து சபை அத்தொகையை செலுத்தியதாகவும் ஊடகங்கள் தெரிவித்திருந்தன. பாராளுமன்றத்தில் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. இந்த பஷிலுக்கு வழங்கிய தேனீர் உபசாரத்துக்கான பணம் செலுத்தாமை குறித்து கேள்வியெழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இந்திய பாதுகாப்பு ஆலோசகர் ரணிலுடன் பேசியது என்ன?

இவ்வாரத்தில் இடம்பெற்ற மற்றுமொரு முக்கிய நிகழ்வு இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் இரகசியமாக இலங்கைக்கு வந்து சென்றதாகும்.

இவர் இரு நாட்கள் இலங்கையில் தங்கிருந்து ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. கடந்த 19 ஆம் திகதி இவர் இலங்கைக்கு வருகை தந்தமைக்கான காரணம் இதுவரை வெளிவரவில்லை. இரு நாட்கள் தங்கியிருந்த இவர் ஜனாதிபதி மற்றும் உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். இந்தியாவின் விஷேட செய்தியொன்றை இலங்கைக்கு எடுத்து வந்தாரா அல்லது இலங்கையிலிருந்து முக்கிய செய்தி எதனையும் இந்தியாவுக்கு எடுத்துச் சென்றாரா என்பது இதுவரை வெளியாகவில்லை.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு மூன்று மாதங்களாக சந்திப்பதற்கு முயற்சித்த போதிலும், இதுவரை அதற்கான நேரம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. கொழும்பிலிருக்கும் இந்தியத் தூ துவராலயம் ஊடாவும், புதுடில்லியில் இருக்கும் இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட ஊடாகவும் நேரமொன்றை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுத்த போதிலும், இதுவரை அதற்கான நேரம் ஒதுக்கப்படவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் விஷேட பிரதிநிதியான சாகஹ ரத்நாயக்காவை இந்தியாவுக்கு அனுப்பியிருந்த போதிலும், பிரதமரைச் சந்திப்பதற்கு நேரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அதன் பிறகு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி - இந்தியப் பிரதமர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்வதற்கு முயற்சித்ததாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. கோத்தாபய ராஜபக்ஷ, அஜித் தோவாலுடன் தொலைபேசியில் உரையாடி ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்குமாறு கேட்டதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

---

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 NOVEMBER 27 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

## பலஸ்தீனுக்கு எப்போது நீதி கிடைக்கப் போகிறது?

வருடா வருடா சர்வதேச பலஸ்தீன தினம் உலகெங்கிலும் நவம்பர் 29 ஆம் திகதி அனுஸ்டிக்கப்படுகின்றது. கடந்த 55 வருடங்களுக்கும் மேலாக உலகில் தீர்க்கப்படாது இருக்கும் ஒரு சர்வதேச பிரச்சினையாக பலஸ்தீன பிரச்சினை இருக்கிறது. இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டு சொல்லொணாத் துயரங்களை நாளுக்கு நாள் அனுபவித்து வரும் பலஸ்தீன மக்களது பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்வதற்குகாகவே ஐக்கிய நாடுகள் சபை இத்தினத்தை சர்வதேச பலஸ்தீன தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

ஒரு கோடியே 30 இலட்சம் சனத்தொகையை கொண்ட பலஸ்தீனில் இன்று அரைவாசிக்கு மேற்பட்டோர் அகதிகளாக நாடோடிகள் போன்று அலைந்து திரிந்து வாழ்ந்து வருகின்றனர். கடந்த 55 வருட காலத்தில் பலஸ்தீனர்களது தாயகம் கபலீகரம் செய்யப்பட்டு வரப்படுகின்றது. சுமார் 27 ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பு இரஸ்ரேலினால் அபகரிக்கப்பட்டுள்ளது. இது மற்றைய நிலப்பரப்பின் 85 சதவீதமாகும். பலஸ்தீனின் முக்கிய பிரதேசங்களில் ஒன்றான காஸா பிரதேசம் ஒரு திறந்த வெளிச் சிறையாக மாற்றப்பட்டுள்ளது. மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றான குடிநீரைக் கூட பெற முடியாத நிலையில் காஸாவில் பலஸ்தீனர்கள் வாழ்ந்து வருகிறார்கள். தமது மண்ணில் ஊற்றுறெடுக்கும் தண்ணீரைக் கூட பலஸ்தீனர்கள் இஸ்ரேலிடம் பணம் செலுத்தி பெற்றுக் கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

பலஸ்தீனில் தொடராக இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு நியமித்த பிரபலமான குழு தனது இடைக்கால அறிக்கையை அண்மையில் வெளியிட்டிருந்தது.

தென்னாபிரிக்க நவநீதம்பிள்ளை, அவுஸ்திரேலிய மிளுத் காத்தன், இந்தியாவின் கிறிஸ்தோப்பர் சிதாத் ஆகிய மனித உரிமை செயற்பாட்டாளர்களை உள்ளடக்கி செயற்பட்ட குழு பலஸ்தீனில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் அட்டகாசங்களை அட்டவணை படுத்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் மேற்கொண்டுவரும் அட்டூழியங்கள் குற்றச் செயல்களாக கருதப்பட்டு சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்துள்ளது. 55 வருட காலமாக பலஸ்தீன சிரிய பிரதேசங்களில் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புக்களை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென ஆணைக்குழு இஸ்ரேலுக்கு கோரிக்கை விடுத்துள்ளதோடு, பாதுகாப்பு கவுன்சிலுக்கும் இந்தப் பிரரேணையை சமர்பித்துள்ளது.

இஸ்ரேல் பலஸ்தீன மக்களுக்கு மனித நீதிக்கு எதிராக செயற்படுவதை நியாயப்படுத்த மேலும் காரணிகள் தேவைப்படாது என கருதுகிறோம். இஸ்ரேலின் சண்டால செயல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும். உலகம் இனியும் இதனை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. பலஸ்தீன பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதனை இனியும் தாமதப்படுத்தக்கூடாது. இஸ்ரேலியர்களும் மனித நீதிக்கு மதிப்பளித்து விட்டுக் கொடுப்புடன் செயற்படுவது அவசியமாகும்.

பலஸ்தீன மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பதற்காக இலங்கை வாழ் மக்களின் பெரும்பாலானோர் இன, மத, கட்சி பேதமின்றி பலஸ்தீனர்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இலங்கையில் நீண்ட காலம் இயங்கிவரும் பலஸ்தீன ஒருணைப்பாட்டு இயக்கம் பலஸ்தீன மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென குரல் கொடுத்து வருகின்றது. அதேபோன்று இலங்கை பாராளுமன்றத்தில் இயங்கும் பலஸ்தீன – இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கமும் பலஸ்தீன ஒருமைப்பாட்டுக்காக குரல் கொடுத்து வருகின்றது. பலஸ்தீன மக்களுக்கு நீதி கோரி 29ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கருத்தரங்கொன்றை இலங்கை – பலஸ்தீன ஒருமைப்பாட்டுக்குழு ஏற்பாடு செய்திருக்கிறது. இவ்வாறான கருத்தரங்குகள் பலஸ்தீன மக்களுக்கு நீதி கிடைப்பதற்கும், நாட்டு மக்களது ஆதரவினை மேலும் அதிகரிப்பதற்கும் உதவுமென்பதே எமது நம்பிக்கை.

பலஸ்தீன மக்களது அழுகைக்கு முற்றுப்புள்ளி வைத்து மனிதர்களாக வாழ்வதற்குரிய சூழலை உருவாக்க நாம் எல்லோரும் இறைவனிடம் பிரார்த்திப்போம்.

ஆசிய கண்டத்தின் கடைசிக்காலணியை ஒழித்துக் கட்டுவதற்கு பேதமின்றி குரல் கொடுப்பதற்கு சகலரும் முன்வருவது மனித நீதிக்கு அளிக்கும் கௌரவமாகும்.

# கேகாலையில் வைத்திய துறைக்கு தெரிவான சிலோன் லேடிஸ் கெம்பஸ் மாணவி இல்மா அன்வர் கௌரவிப்பு!



சமீஹா சபீர்

கேகாலை மாவட்டத்தில் உயர்தர பரீட்சையில் தமிழ் மொழி மூலம் 3A சித்திகளைப் பெற்று மருத்துவ துறைக்கு மாவட்டத்தலேயே முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான சிலோன் லேடிஸ் கெம்பஸ் மாணவி பாத்திமா இல்மா அன்வர் அவர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தினால் பாராட்டி கௌரவித்த நிகழ்வு கடந்த ஒக்டோபர் 22ம் திகதி வரக்காபொலயில் அமைந்துள்ள சிலோன் லேடிஸ் கெம்பஸில் இடம் பெற்றது.

2021ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையிலே இந்த சித்தியை எய்தி கேகாலை மாவட்டதில் முதலாவது இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 59வது இடத்தினையும் பெற்று தான் கற்ற பாடசாலையான சிலோன் லேடிஸ் கெம்பஸுக்கு பெருமை சேர்த்துள்ளார் பாத்திமா இல்மா.

கொழும்பு கண்டி பிரதான வீதியில் இருந்து சுமார் 1 ½ km தூரத்தில் அங்குருவல்ல என்ற பாதையில் சிலோன் லேடிஸ் கெம்பஸ் அமைந்துள்ளது. இப் பாடசாலை 2018 ஜனவரி 25ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை CLC என்ற பெயராலும் சுருக்கமாக அழைக்கப்படுகிறது.

ஒரு நீண்ட பயணத்தை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை தற்போது சுமார் 500 மாணவிகளுக்கு சிறந்த



கல்வி சேவையை வழங்கிக் கொண்டிருக்கிறது.

தனியாயர் தனி முஸ்லிம் பெண்கள் பாடசாலையாக விளங்கும் இப்பாடசாலை நீண்டதொரு வரலாற்றைக் கொண்டது.

சாதாரணமாக ஒரு பாடசாலை, மாணவரின் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இலக்குகளும் இலட்சியங்களும் மழை காலத்தில் முளைத்து அழிந்து விடும் காளான்கள் போல் அல்ல. மாணவர்களின் இலட்சியங்கள் ஒரு பாடசாலையால் எவ்வாறு வித்திட்டு , சிறந்த கல்வியால் பசளையிட்டு, வளர்த்து, அறுவடை செய்ய வேண்டும் என்பதற்கு இந்த பாடசாலை ஒரு சிறந்த எடுத்து காட்டு என்றுதான் சொல்ல வேண்டும்.

ஊடுஉ யின் நீண்ட கால கனவை ந னவாக்கும் இலக்கினை மேலும் வலுவூட்டுவதற்கு பவுண்டர் சேர்மன் Nafees பொருத்தமான தளத்தை



தலைவர் நபீஸ்

உருவாக்கினார். வெற்றிக்கு மிகப்பெரிய காரணமாக அமைந்தது, அவர் பாடசாலை தொடர்பாக கொண்டிருந்த நீண்ட கால அனுபவமாகும்.

அவரின் நிர்வாகத்தின் கீழ் இலங்கை முழுவதும் ஏராளமான கணக்காளர்களும், கல்வி கற்ற இளைஞர்களும் இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எந்த சவாலையும் சளைக்காத உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு பாடசாலையில் நிர்வாகத்திற்கு உருவாக்கித் தந்ததில் அவருக்கு பெரும் பங்கு உண்டு.

முழுமையான ஒரு இஸ்லாமிய சூழலில் செயல்திறன் மிக்க ஒரு முஸ்லிம் பெண்கள் சமுதாயத்தை கட்டி யெழுப்ப வேண்டும், என்பது பாடசாலையின் முகாமைத்துவ குழுவால் முன்வைக்கப்பட்ட திட்டமிடலில் பிரதான கருவாக காணப்பட்டது.

இக்குழுவின் திட்டத்தின் கருத்துக்கள் இஸ்லாத்தோடு பின்னிப் பிணைந்து இருந்தமையால் பாடசாலை கடந்து செல்ல வேண்டிய பாதைகள் இலகுவாக திறந்து விடப்பட்டதோடு தெளிவானதாய் இருந்தது.

பல வெற்றிப்படிகளை கடந்த இப் பாடசாலையின் சாதனையாக 2021 நடைபெற்ற உயர்தர பரீட்சையின் முடிவுகள் பாடசாலைக்கு பெருமை சேர்த்தது.

கேகாலை மாவட்டத்தில் விஞ்ஞானப் பிரிவில் மாணவி பாத்திமா இல்மா அன்வர் முதலிடத்தினை பெற்றுக்கொண்டது மட்டுமல்லலாது அகில இலங்கை ரீதியில் அனைத்து மாவட்டங்ளில் இருந்தும் முதலிடம் பெற்றுக் கொண்ட ஒரே ஒரு முஸ்லிம் மாணவி என்ற பெறுமையையும் பாத்திமா இல்மா தனது பாடசாலைக்கு ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார்.

இவரை பாராட்டி கௌரவிக்கும் முகமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மிடியா போரத்தின் முன்னால் தலைவர் என். ஏம். அமீன், தலைவி புர்கான் பீ இப்திகார், உப தலைவர் நிலாம் உட்பட போரத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர்களான தாஹா முஸம்மமில், ஜாவிட்முனவ்வர், சமீஹா சபீர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர் அங்கு உரையாற்றிய முஸ்விம் மீடியா போரதின் தலைவி .. இன்று நவீன





தொழில் நுட்பம். பரந்த உலகத்தை வீட்டுக்குள் கொண்டு வந்து விட்டது. உங்கள் அழகான கை விரல் நுனிகள் இறைவனின் அழகிய படைப்பான இந்த உலகத்தை பார்த்து உங்களை வியக்க வைக்கின்றது .

தொடர்பாடல் துறையில் பாரிய புரட்சியை ஏற்படுத்திய இணையத்தை ஊடகவியலில் ஒரு கட்டுபாடற்ற



திருமதி வஸீமா (கல்வி விவகாரத் தலைவர்)

தன்மையை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலையில் கீழ் பிரிவில் கல்விகற்கும் நீங்கள் உங்களது கை விரல்களை நீட்டச்சொல்லி உங்கள் நகங்கள் வெட்டப்பட்டுள்ளதா என்று ஆசிரியர்கள் நோட்மிடுவார்கள். நகம் வெட்டாதவர்கள் ஆசிரியர் அறியாமல் வாயருகில் விரலை கொணடு சென்று ஆசிரியருக்கு தெரியாமல் கடித்து விடுவார்கள். கை நகங்கள் மூலம் அழுக்குகள் எனும் தீங்கு மாணவர்களின் ஆரோக்கியத்தை கெட்டு விடச்செய்யும். அதன் பின் நோயுக்கு முகம் கொடுக்க நேரிடும். அதே போன்றுதான் இன்று கை விரல் மூலம் உங்கள் கரங்களில் தவழும் கைபேசி ,ருக்கினறதே அதன் மூலமாகவும் நீங்கள் உங்களை அறியாமல் தீங்கினை வரவழைத்து கொள்கிறர்கள்

நல்லதை அறிந்து கொள்ள வேண்டும், தீயவற்றுக்குள் நீங்கள் உற்பிரவேசிக்க கூடாது. நேரத்தை சாப்பிட்டு விடும் இந்த கைபேசி ஊடகம் மூலம் நீங்கள் படிக்கும் பொன்னான நேரத்ததை வீணடிக்காது கல்விலேயே நாட்டம் செலுத்த வேண்டும் - என்று உரையாற்றினார்.

அதனைதொடர்ந்து சிலோன் லேடிஸ் கெம்பஸின் தாலைவர் நபீஸுடன் சிறு நேர்காணலை நடாத்தியிருந்தேன் .

**கேள்வி: இந்தப் பாடசாலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு உங்களுக்குத் தோன்றியது?**

பதில்: நான் சுமார் 17 வருடங்கள் உயர் தர ஆங்கில தனியார் பாடசாலை ஒன்றின் தலைமை பொறுப்பில் இருந்து வந்தேன். அக்காலப் பகுதியில் எனது முழு நேர கண்காணிப்பில் இருந்த சுமார் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்று கணக்காளர்களாக இருக்கின்றார்கள் என்பதை இவ்விடத்தில் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.அந்த அனுபவங்களை பெண்கள் பாடசாலை ஒன்றில் பிரயோகிக்க வேண்டும் என்ற ஆலோசனையை எனது மனைவியே முன் வைத்தார். அது அவருடைய நீண்ட கால ஆசையாக இருந்தது .

**கே: தனியான பெண்கள் பாடசாலையாக மட்டும் உருவாக்கி இருப்பதற்கான காரணம்?**

ப: இன்றைய கால சூழலில் பெண் பிள்ளைகள் கற்றல் நடவடிக்கைகளின் போது முகம் கொடுக்க வேண்டிய பல்வேறு வகையான பிரச்சினைகளில் இருந்தும் அவர்களை பாதுகாத்து நல்ல தலைமுறை ஒன்றை உருவாக்க கூடிய பெண்களை இவ்விடத்தளிருந்து



பணிப்பாளர் றிஸ்வான்

உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோளாகும்.

**கே: உங்கள் பாடசாலை பாட ஆசிரியர்களின் பங்களிப்புகள் மாணவிகளுக்கு எவ்வளவு உறுதுணையாக இருக்கின்றது?**





ப: ஆசிரியர்களைப் பொருத்தவரையில் அனைவரும் சமூகப் பணி மறவாமல் செயற்படுகின்றவர்கள் . அவர்களுக்கும் எங்களுக்கும் உள்ள கருத்து ஒற்றுமை எமது வெற்றியின் மறைக்க முடியாத உண்மையாகும்.?

**கே: பாத்திமா இல்மா வெற்றிக்கு அவர் அடைந்து கொண்ட இடத்திற்கு கேகாலை மாவட்டத்தில் முதலாம் இடத்தினையும் அகில இலங்கை ரீதியில் முஸ்லிம் பெண் இருப்பதை பற்றிய உங்கள் எண்ணக் கரு?**

ப: பாத்திமா இல்மா கேகாலை மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றது எமது பாடசாலைக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். இந்த வெற்றியில் இல்மா, அவரது பெற்றோர், எமது ஆசிரியர்கள் மற்றும் எமது நிர்வாகத்தின் இயலுமைக்கு அப்பாற்பட்ட முயற்சி ஆகிய எல்லாவற்றையும் கூறவேண்டும்.

நிகழ்வில் மாணவி பாத்திமா இல்மாவை கௌரவப்படுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தினால் அன்பளிப்புக்களும் வழங்கி வைக்கபட்டது.

***




# அமேசன் உயர்கல்வி நிறுவனத்திற்கு மற்றுமொரு அங்கிகாரம்




பம்பலபிட்டியில் அமைந்துள்ள அமேசன் உயர்கல்வி நிறுவனமானது இலங்கை அரசாங்கத்தின் மூன்றாம் நிலை கல்வி ஆணைக்குழுவுடனும் மற்றும் பல சர்வதேச அமைப்புகளுடனும் பதியப்பட்டு இணைந்து செயற்பட்டு வருகின்றது. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும் இணைத்து பல பட்டப்படிப்புகளை வழங்கி வருகிறது.

சர்வதேச ரீதியில் பல செயற் திட்டங்களை செய்து வருகின்ற ளுருேுேழு புடுழுடீயுடு நிறுவனத்தின் அங்கீகாரம்

அமேசன் உயர் கல்வி நிறுவனத்திற்கு 24/10/2022 அன்று தகவல் தொழில்நுட்ப அமைச்சர் கனக ஹெரத் இனால் BMICH இல் நடை பெற்ற நிகழ்வின் போது அமேசன் உயர் கல்விநிறுவனத்தின் பணிப்பாளர் திரு இல்ஹாம் மரிக்கார் அவர்களுக்கு உத்தியோக பூர்வ சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதன் மூலம் அமேசன் நிறுவனத்திற்கு மேலுமொறு சர்வதேச அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு www.amazoncollege.lk என்ற வெப் தளத்தை நாடவும்.



புனித கஃபதுல்லாஹ் மேல் போடப்பட்டுள்ள (கிஷ்வா) துணி தைக்கப்படும் இடத்திற்கு விஷேட அதிதியாக அழைக்கப்பட்ட இலங்கையர் கலாநிதி அல்-ஹாஜ் பௌசுல் ஜிப்ரி (மல்வான) மக்கா முகர்ரமாவில் உள்ள கிஷ்வா துணி தைக்கப்படும் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷெய்க் அஹமட் பின் முஸய்த் அல் சுவய்ஹிரியின் விசேட அழைப்பின் பேரில் அங்கு சென்று அதன் பணிகளை பார்வையிட்டார்.



லங்கா விஷன் எக்சன் பவுண்டேசனின் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அமெரிக்கா நண்பன் அறக்கட்டளையின் நிதி அனுசரணை ஊடாக ரம்பொடை ஆர். பி தோட்ட மக்களுக்கு இருவேளை உணவு வழங்கும் நிகழ்ச்சி திட்டம் கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இந்நிகழ்ச்சி திட்டமானது 150 நாட்களையும் கடந்து மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதில் ஒரு பகுதி வெள்ளியன்று (25) அத்தோட்ட மக்களுக்கு காலை உணவு வழங்கப்படுவதை காணலாம். (பி.கேதீஸ்)

## வரலாற்று சாதனை படைத்த மினுவாங்கொடை அல் அமான்

(ரிஹ்மி ஹக்கீம்)

இம்முறை வெளியான 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் மினுவாங்கொடை, கல்லொழுவ அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயம் மினுவாங்கொடை வலயத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளது.

பாடசாலையில் இம்முறை 72மூ மாணவர்கள் உயர் தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளதோடு, 2 மாணவர்கள் 09 ஏ சித்திகளை பெற்றுள்ளனர்.

01) K.A Halik 9A
02) M.I.M.Amri 9A
03) M.R.M.Rayyan 8A 1B
04) F.K.Farha 7A 2B
05) M.F.F.Yusra 7A 2B
06) Y.A Zahra 7A 1B 1C
07) A.H.A.Husein 6A 3B
08) M.F.F Faseeha 5A 3B 1C
09) M.F.F.Nashma 5A 3B 1C
10) M.F.F.Sheha 5A 2B 2C
11) M.M.M.Muhanath 4A 3B 2C
12) M.N.Naksha 4A 2B 3C
13) M.S. Sajeer 3A 3B 3C
14) M.F.F. Zamrooth 3A 2B 3C 1S
15) R.Sadam Hussain 2A 5B 2C
16) M.S.F.Sahla 2A 3B 4C
17) U.F.Mahira 2A 3B 3C 1S
18) M.A.F.Amana 2A 3B 3C 1S

Total Sat - 61
A/L Qualified - 44
Percentage - 72%

அதிபர் எம்.டி.எம்.ஆஸிமின் தலைமையில் பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்கம், பழைய மாணவிகள் சங்கம் என சகல தரப்பினரதும் ஒத்துழைப்போடு பாடசாலை வெற்றி நடை போட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

பாடசாலையின் பெறுபேறுகள் கடந்த ஒரு தசாப்த காலமாக கீழ்மட்டத்தில் காணப்பட்ட போதிலும், அதிபர் எம்.டி.எம்.ஆஸிம் பொறுப்பேற்றதில் இருந்து பாடசாலையின் பெறுபேறுகள் மிகவும் சிறந்த முறையில் வெளியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் பாடசாலையில் 49மூ ஆக இருந்த சாதாரண தர சித்தியை இந்த வருடம் 65மூ ஆக உயர்த்துவது அதிபரின் இலக்காக இருந்து வந்த நிலையில், இந்த வருடம் அதனையும் தாண்டி 72% ஆன மாணவர்கள் உயர் தரத்திற்கு தகுதி பெற்றுள்ளமை விஷேட அம்சமாகும்.

## கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயம் வரலாற்றுச் சாதனை!

(எம்.என்.எம்.அப்ராஸ், நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலயத்தில் கமுஃகமு / இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து கடந்த 2021ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதரண தர பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகிய நிலையில் என்.எம்.நப்றத் என்ற மாணவன் பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக9A சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

## சம்மாந்துறை வலயம் இம்முறை க.பொ.த (சா/த) பரீட்சையில் சாதனை!

(ஏ.எம்.றிகாஸ்)

சம்மாந்துறை வலயமானது கடந்த ஆண்டுகளை ஒப்பிடுகையில் இம்முறை அதிக சித்திகளைப்பெற்று சாதனையை எட்டியுள்ளது.

வலயத்தில் 9A சித்தி பெற்ற மாணவர்களும் பாடசாலை விபரங்களும்.

தகவல் :

வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை

~ Km/St/ Sammanthurai M.M.M.V. (30)
~ Km/St/ AL Marjan Muslim Ladies College (04)
~ Km/St/Navithanveli Annamalai MV (04)
~ Km/St/Ashraff Central College (01)
~ Km/St/ Siraj Maha Vidyalayam. (01)
~ Km/St/Dharussalam Maha Vidyalayam (01)
~ Km/St/ Kalaimagal Vidyalayam (01)
~ KmSt/ Veerathidal Al-Hidhaya M.V. (01)
~ Km/St Vivekaneda Maha Vidyalayam (01)

இது கடந்த கால க.பொ.த (சாஃத) பரீட்சை பெறுபேறுகளை ஒப்பிடுகையில்,

க.பொ.த. (சா/த) பரீட்சை 2021 பெறுபேறுகளின் அடிப்படையில் சம்மாந்துறை வலயமானது அனைத்துப் பாடங்களிலும் விஷேட திறமைச் சித்திகளைப் (9A) பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 19 மாணவர்களால் அதிகரித்திருப்பதோடு அனைத்துப் பாடங்களிலும் சித்திகளைப் பெறத்தவறிய (9W) பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையில் ஒப்பிடுகையில் 20 ஆக குறைந்திருப்பதானது இவ் வலயத்தின் கல்வி வளர்ச்சியை காட்டுவதாகவுள்ளது.

இது பற்றி சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர் தெரிவிக்கையில் இதற்காகப் பங்களிப்புச் செய்த மாணவர்கள், ஆசிரியர்கள். அதிபர்கள். பெற்றார்கள். வலயத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள், நலன் விரும்பிகள் மற்றும் விஷேடமாக முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் பணிப்பாளர் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும். பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார்.

## முப்பெரும் விழாவில் ஊடகவியலாளர் நூருள் ஹுதா உமர் கௌரவிப்பு!





மூன்றாவது ஆண்டை சிறப்பிக்குமுகமாக ஆர்.ஜே. வலையமைப்பின் ஏற்பாட்டில் வலையமைப்பின் தலைவர் ஏ.முஹம்மட் இன்ஸாப் தலைமையில் இடம்பெற்ற "முப்பெரும்விழா- 2022" நிகழ்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழிநுட்ப பீடத்தின் மண்டபத்தில் சனிக்கிழமை (26) இடம்பெற்றது.

ஆர்.ஜே. வலையமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், ஊடகம், சமூக சேவை உட்பட பல்வேறுதுறை சார் பிரமுகர்களும் இந்நிகழ்வில் சேவைநலன் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழக கலை, கலாசாரபீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில், சம்மாந்துறை பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ். எம். நவாஸ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பிரதிப்பணிப்பாளர் வஸீர் அப்துல் ஹையூம் கலந்து கொண்டார். மேலும் சம்மாந்துறை உலமா சபை தலைவர், செயலாளர், பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர், சிலோன் மீடியா போரம், முஸ்லிம் மீடியா போரம் போன்ற ஊடக அமைப்புக்களின் முக்கிய பிரதானிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஊடகம் சார் செயற்பாடுகளை வாழ்த்தும் வகையில் ஊடகவியலாளர்கள் பலரும் கௌரவிக்கப்பட்டனர். அந் நிகழ்வில் ஊடகவியளாளர் ஹுதா உமரும் ஊடக செயற்பாடுகளுக்காக கௌரவிக்கப்பட்டார்.

## கஹட்டோவிட்ட பிரதேச பாடசாலைகளின் வறிய மாணவர்களுக்கான சப்பாத்துக்களை வழங்கி வைத்த YMMA கல்விப்பிரிவு




YMMA கஹட்டோவிட்ட கிளையின் வேண்டுகோளின் பிரகாரம் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட லுஆஆயு பணிப்பாளர் Mr.Nazare kamil இன் முயற்சியில் கஹட்டோவிட்ட அல் பத்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவ மாணவிகளுக்கான காலணிகள் (Shoes) கடந்த வெள்ளிக்கிழமை (25) கஹட்டோவிட்ட லுஆஆயு கல்விப் பிரிவால் வழங்கப்பட்டது.

கஹட்டோவிட்ட YMMA தலைவர் அல்ஹாஜ் A.B.G. பிர்தவ்ஸினால் இரு பாடசாலைகளினதும் பொறுப்பாசிரியர்களிடத்தில் காலணித் தொகுதி கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சமூகமளித்த கஹட்டோவிட்ட YMMA செயலாளர் A. B. M. Ekraam, உறுப்பினர்களான M. R. M. Ilham, Mr. A. B. M. Saeedh ஆகியோருடன் அல் பத்ரியா மஹா வித்தியாலயம் சார்பாக அதிபர் M.B.F. Saleeha (SLPS), ஆசிரியர்களான Ramzan, Ramzi Ali, பாடசாலை SDC உறுப்பினர்களான M. Marwan, M. Riham ஆகியோரையும், முஸ்லிம் பாலிகா வித்தியாலயம் சார்பாக ஆசிரியர் M.Imraan ஆகியோரை படங்களில் காணலாம்.



எம்.எஸ். அமீர் ஹுசைன்



# ஆட்சியாளர்களின் அவலங்களால் விழி பிதுங்கும் மக்கள்!

எந்தவொரு நாடும் பொருளாதார அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் அடைய வேண்டுமானால் அந்த நாட்டில் அரசியல் ஸ்தீர நிலை காணப்பட வேண்டும். நாட்டு நலனை அடிப்படையாக வைத்து மக்களது வாழ்க்கைத் தர மேம்பாடு, தலைக்குரிய வருமானத்தை உயர்த்துவது, உள்நாட்டில் மொத்த தேசிய வருமானத்தை உயர்த்துவது உட்பட அரசாங்கம் முன்னெடுக்கின்ற நடவடிக்கை களுக்கு மக்களது பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்க வேண்டும். எந்த வகையிலும் நல்ல திட்டங்களையும் தூர நோக்கிலான மக்கள் நலன் சார்ந்த முன்னெடுப்புக்களை சீர்குழைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும். ஆட்சியாளர்களிடையில் பொறுப்புக் கூறல், வெளிப்படைத்தன்மை என்பன காணப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்க வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் பேசும் போது இரண்டு தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை காரணமாக நாட்டில் மக்கள் மத்தியிலும் விஷேடமாக மனித உரிமைகள் தொடர்பாக செயற்படும் மக்கள் நலன சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்தும் தரப்பினரிடையிலும் ஒருவிதமான சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த உரை சற்று கடுமையானதாகவே அமைந்திருந்தததை அவதானிக்க முடிகின்றது. இனிமேல் போராட்டம் என்ற பெயருக்கே அல்லது அரச எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களுக்கு இடமில்லை என்றும் அவ்வாறு நடக்குமானால் பாதுகாப்பு படையினரைக் கொண்டு அத்தகைய எதிர்ப்புக்களை அடக்க அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்காது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மனித உரிமை என்ற பெயரில் இத்தகைய மனித உரிமை ஆர்வலர்களின் தூ ண்டுதல்கள் காரணமாகவே மக்கள் வீதிக்கு இறங்குகின்றனர் என்றும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் அவ்வாறான நடவடிக்கைகளுக்கு மக்களை தூ ண்ட வேண்டாம். அதே நேரம் பாதுாப்பு தரப்பினரும் அவர்களது கடமையை சரியாக செய்ய வேண்டும். இத்தகைய அரச விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது பொலீஸ் மற்றும் இராணுவம் மீதுள்ள தார்மீக கடமை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த நிலைமையானது அரசாங்கம் அவசரகால நீடிப்பை பயன்படுத்தி நாட்டில் மக்களுக்கு இருக்கின்ற அடிப்படை சுதந்திரங்களை நசுக்க எடுக்கப்படும் நடவடிக்கையா என்ற கேள்வியை ஏற்படுத்தி இருக்கின்றது. ஏற்கனவே நாட்டில் நிலவிய மோசமான பொருளாதார நிலை மற்றும் மக்கள் பலவிதமான பொருளாதார துன்பங்களை அனுபவித்ததன் காரணமாக 2022 ஏப்ரில் மாதத்தில் அப்போதைய அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் போராட்டத்தில் இறங்கினர். ஆதன் விளைவாக அரசாங்கம் பதவி இழந்தது. அப்போதைய பிரதமர், ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சர், மத்திய வங்கியின் ஆளுனர் ஆகியோர் பதவிகளை துறக்க நேரிட்டது. அதே போன்று அமைச்சர்களும் பதவிகளை துறந்து நாட்டில் அரசியல் நெருக்கடி உருவாகியது.

இவ்வாறான ஒரு பின்னணியிலேயே புதிய அரசாங்கம் ஒன்று உருவாகவும் ஆட்சி மாற்றத்திற்குமான சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டது. ஐ.தே.க. 2019 ஆம் ஆண்டு ஆண்டு பொதுத் தேர்தலில் ஒரு ஆசத்தை கூட பெற முடியாமல் போன நிலையில் போனஸ் ஆசனத்தில் அதன் தலைவராக இருந்து ரனில் விக்கிரமசிங்கா நாடாளுமன்ற உறுப்பினரானார். அதே நேரம் சுமார் 70 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட அரசியல் கட்சியான ஐ.தே.க. வை அழித்தவர் என்ற வசை பாடல்களுக்கு உட்பட்ட நிலையில் ஓரம் கட்டப்பட்டிருந்த இதே ரனில் விக்கிரமசிங்கா இன்று குறுகிய இரண்டு வருட காலத்திற்காவது இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியக அரியாசனத்தில் அமர வாய்ப்பை ஏற்படுத்தியது அன்று நடைபெற்ற மக்கள் போராட்டமும் ஆட்சிக்கு எதிரான நடவடிக்கையுமாகும். அந்த வகையில் குறிப்பிட்ட போராட்டத்திற்கும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மக்களுக்கும் நன்றிக் கடன்பட்டிருப்பவரே இன்றைய ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா ஆவார்.

ஆனாலும் இப்போது பதவியில் அமர்ந்த பின்னர் கிடைத்துள்ள பதவியை பாதுகாத்து பலப்படுத்திக்கொள்ள எந்தவகையான எதிர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவற்றை கச்சிதமான முறையில் ஜனாதிபதி என்ற வகையில் நிறைவேற்று அதிகாரத்தை பயபன்படுத்தி அவர் மேற்கொண்டு வருகின்றார். அந்த வரிசையில் தான் இனி ஆர்ப்பாட்டங்கள், அரச விரோத செயற்பாடுகள் என்பவற்றை நசுக்க எடுக்கப்பட இருக்கின்ற நடவடிக்கைகளாகும் என்று கருத முடிகின்றது. இது ஒருவகையில் அன்றை ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவிற்கு இருக்காத ரனிலின் விஷேட ஆளுமை பன்பின் வெளித்தோற்றம் எனலாம்.

அதுமட்டுமல்லாமல் குறுகிய காலம் அவ்வப்போது பிரதமர் பதவிகளை வகித்தாலும் 1994 ஆம் ஆண்டு முதல் எதிர்க்கட்சி தலைவராகவும் பல தேர்தல்களில் தோள்விகளை சந்தித்த நல்ல அனுபவத்தை பெற்றுள்ள சிரேஷ்ட அரசியல்வாதி என்ற முறையில் ஒரு நாட்டில் எந்த மூலை முடக்கில் இருந்து அரசியல், மதவாத அல்லது இனவாத குழப்பங்கள் உருவாகின்றன என்பதை சரியாக புரிந்து அறிந்து அவற்றின் சூத்திரதாரிகள் யார் என்பதை கூட அறிந்து வைத்துள்ள ஒரு அனுபவசாளி என்ற முறையிலே அவர் இவ்வாறு கடுமையான உரையை நிகழ்த்தினார் என்றும் கருத முடிகின்றது. எதுவும் தெரியாத ஒருவராக எதையும் ஜனாதிபதி குறிப்பிடவில்லை என்பதும் உண்மையாகும்.

அதே நேரம் நடந்து முடிந்த அரசியல் குழப்ப நிலையின் பின்னணி பற்றியும் முன்னைய ஜனாதிபதி நாட்டை விட்டு ஓட்டம் பிடித்தமைபற்றியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னால் அமைச்சருமான மைத்திரிபால சிரிசேனா 2022.11. 24 ஆம் திகதி வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பேசும் போது கோதாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடுவதற்கு வழிவகுத்த காரணங்கள் பற்றி குறிப்பிடுகையில் அன்றைய அரச புலனாய்வு துறையினர் அப்போதைய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ விற்கு வழங்கிய தவறான தகவலே காரணம் என்று குற்றம்சாட்டினார். புலனாய்வாளர்கள் வழங்கி இருந்த தகவலுக்கமைய சுமார் நான்கு இலட்சம் பேர்கள் அளவிலே கொழும்பிற்கு வருவார்கள் என்றும் அவர்களை ஆயுத முனையில் அடக்கி பதவியை பாதுகாத்துக் கொள்ளலாம் என்று அப்போதைய ஜனாதிபதி கருதி இருந்தார். ஆனாலும் அன்றைய போராட்டத்திற்கு 08 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட வந்ததால் தாக்குப் பிடிக்க முடியாமல் ஜனாதிபதி ஓட்டம் பிடித்தார் என்று விளக்கமளித்தார்

ஏற்கனவே கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நாட்டில் சிவில் யுத்தம் நடைபெற்று வந்த காலப்பகுதியில் பயங்கரவாத தடைச் சட்டம் மூலம் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மக்களது பேச்சு, எழுத்து, கருத்து வெளிப்பாட்டு சுதந்திரங்கள் உட்பட அடிப்படை உரிமைகள், சுதந்திரங்கள் நசுக்கப்பட்ட வரலாறு இருக்கின்றது. தற்போது யுத்தம் ஒன்று இல்லாத நிலையில் நாட்டில் மக்கள் அனுபவிக்கின்ற பொருளாதார கஷ்டங்களை வெளிப்படுத்த, மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை வெளி உலகிற்கு காட்ட வீதிக்கு இறங்குவதை தவிர மாற்று வழி இல்லை. மக்கள் எல்லாத் துன்பங்களையும் அனுபவித்தவர்களாக அதனை வெளிக்காட்டாமல் வாயடைத்து மௌனம் சாதித்தால் ஆட்சியாளர்கள் அவர்கள் பாட்டில் நாட்டின் வளங்களை சூரையாடும் வேலைகளை செய்து நாட்டை மேலும் நாசமாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

சாம்பள் மேட்டில் இருந்து எழுவோம், மக்களோடு ஒன்றாக எழும்பவோம் என்றேல்லாம் கூறிக்கொண்டு மீண்டும் எழுச்சி பெற முயற்சிப்பவர்கள் முன்னைய ஆட்சி காலத்தில் ஊழல்களிலும் மோசடிகளிலும் ஈடுபட்டு நாட்டை சூரையாடிய மோசடிக்காரர்களாவர். இந்நாட்டின் வாக்காளர்களாகிய மக்களைப் பொருத்த வரையில் அனைவரும் விவேகமானவர்கள் என்று கருத முடியாது. அரசியல் என்ற போர்வையில் பதவிக்கு வர முயற்சி செய்பவர்கள் சொல்லும் எல்லா பொய் களையும், இட்டுக்கட்டப்பட்ட கதைகளையும் எந்த கேள்வியும் இன்றி நம்பி வாக்களிக்கக் கூடிய ஒரு சமூகமாகும். அதனை முன்னைய ஆட்சியாளர்கள் நன்கு அறிவார்கள்.

இவர்களது ஆயுதம் இனாவதம், துவேச உயணர்வை தூண்டி மக்களுக்கிடையில் முறண்பாடுகளை வளர்த்தல், பிரித்தாளும் தந்திரம், மோதல்களை ஏற்படுத்தல் போன்ற தந்திரோபாயங்களாகும். தேசப்பற்று, மதப்பற்று, நாட்டினவாதம் என்பன இன்னொரு வயையான ஆயுதமாகும். இன்றைய அரசாங்கம் எதிர்பார்க்கின்ற ஆட்சிக்கு எதிரான போராட்டம் அல்லது சதி நடக்குமானால் தற்போது ஜனாதிபதியுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் அதே பொதுஜன பெரமுண கட்சியில் இருந்து பிளவுபட்ட மாற்று அல்லது பதவிகள் கிடைக்காமல் அதிருப்தியாளர்களாக இருக்கக்கூடியவர்களாலே அவ்வாறான நிலைமைகள் ஏற்படலாம். தவிர மக்களது போராட்டங்கள் பட்டினிச் சாவில் இருந்து மீள்வதற்கான போராட்டங்களாவே இருக்கும். ஆத்துடன் ஆட்சியாளர்கள் அடக்குமுறையை கையாண்டு மக்களை நசுக்க முற்படும் பொதும் இத்தகைய போராட்டங்கள் வெளிப்படுவது இயல்பாகும்.

ஏற்கனவே சிறப்பாக நடந்துகொண்டிருந்த ஆட்சிக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டம் நடத்தி வீட்டுக்கு அனுப்பவில்லை. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயத்திற்கு பாதிப்பு, எதிபொருள், எரிவாயு தட்டுப்பாடு காரணமாக வீட்டுத்துறையினருக்கு ஏற்பட்ட பாதிப்பு, பண வீக்க அதிகரிப்பு, இலங்கை மத்திய வங்கி ஆளுனரின் கண்மூடித்தனமான நாணய அச்சடிப்பு, ருபாவின் பெருமதியிலான வீழ்ச்சி, மக்களது அன்றாட தொழில்கள் இல்லாமல் போய் வருமான வீழ்ச்சி உட்பட பலவிதமான துன்பங்களை அனுபவித்ததால் மாற்று வழி தெரியாமல் வீதிக்கு இறங்க வேண்டி ஏற்பட்டதை இப்போது அட்சியாளர்கள் மறந்து போராட்டம் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சி கண்டதாக மக்கள் மீது குற்றம்சாட்டி வருகின்றனர்.

குறுகிய அரசியல் இலாபத்தையும் சுய நலத்தையும் குறிக்கோளாகக் கொண்டு எவர் எவ்வாறு மக்களை மடையர்களாக்க நினைத்தாலும் மக்கள் வாக்காளர்கள் என்ற வகையில் அதிகார வர்க்கமாவர். ஒரு தரப்பை ஆட்சிக்கு கொண்டு வருவதும் பதவியல் இருந்து ஓடச் செய்யவும் மக்களுக்கு பலம் இருக்கின்றது என்பதை கடந்த மே 09 திகதி போராட்டம் நிரூபித்துக் காட்டி இருக்கின்றது. அரசியல் அமைப்பால் மக்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்து வருவது போன்று ஆட்சியா ளர்களதும் கடமையாகின்றது.

அதனால் அரசாங்கம் பயங்கரவாத தடைச்சாட்டம், பாதுாகாப்பு ஒழுங்கு விதிகள், அவசரகால தடைச் சட்டம் போன்வற்றை பயன்படுத்தி மக்கள் போராட்டங்களை நசுக்குவதானது ஜனநாயகம் என்ற போர்வையில் நடைபெறும் சர்வர்வாதிகாரமாகும். இந்த ஆட்சியில் எஞ்சி இருப்பது இன்னும் இரண்டு வருடங்களாகும். அந்த குறித்த காலப்பகுதி நிறைவடையும் போது உரிய முறையில் தேர்தல்கள் நடத்தப்பட்டு மக்கள் இறைமை வெளிப்படுத்தப்பட வேண்டும். அதற்கு இடமளிப்பது ஆட்சியாள்களின் பொறுப்பாகும். மாறாக அடக்குமுறையால் பதவியை தக்க வைக்க எடுக்கும் முயற்சியானது ஒருபோதும் நீடித்த தீர்வாக அமையாது என்பது மாத்திரம் உறுதியானதாகும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# பொறுமை தரும் பெருமை

எங்கள் வாழ்க்கையில் எமது பிள்ளைகளின் வாழ்க்கையில் குடும்ப எழுச்சியில் சமூக விருத்தியில் இப்படி எல்லா வாழ்வியல் கட்டங்களில் மிகவும் அவசியமான ஒரு திறன் பொறுமை. இந்த குணம் எல்லோருக்கும் தேவை.

விரக்திஇ துன்பம்இ ஏமாற்றம் போன்ற நிலைகளில் அமைதியாக செயற்படுவது பொறுமையாகும்.

வெற்றிகளை அடைய...

சாதனைகள் படைக்க...

நோய்களில் இருந்து குணம் பெற...

சோதனைகள் தாண்ட....

அவசியமாக இருக்க வேண்டிய மிக முக்கிய பண்புகளில் ஒன்று பொறுமை.

கடினமான சூழ்நிலைகளில் இருந்து வெளிவரவும் தேவைப்படுவது பொறுமை.

குறிப்பாக நெருக்கடிகளின் போது - பொறுமை கட்டாயம் தேவை.

விரக்தி அல்லது துன்பத்தின் போது எங்கள் அமைதியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாவிட்டால்இ நாங்கள் மற்றவர்களை அமைதியாக வைத்திருக்க முடியாது.

பொறுமை என்பது எல்லோரிடமும் இருக்க வேண்டிய திறனாகும். அது இல்லாவிட்டால் கட்டாயம் அதை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பொறுமை இல்லாதவர்களின் நிலை எமக்குத் தெரியும்.

கொஞ்சம் கூட பொறுமை இல்லாதவர்கள்....

உயர் இரத்த அழுத்தம்இ தீவிர கோபம் மற்றும் கூடுதல் மன அழுத்தம் போன்றவற்றால் பாதிக்கப்படுவார்கள் என்று ஆராய்ச்சி கூறுகிறது.

பொறுமை மனச்சோர்வை குறைப்பதுடன் இரக்கம் போன்ற சமூக நடத்தையை ஊக்குவிக்கும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

நாம் அன்றாட வாழ்க்கைக்கு முகம்கொடுக்கும் விதத்திலும் உறவுகளுடன் நடந்து கொள்ளும் முறையிலும் நாம் எவ்வளவு பொறுமையாக நடந்து கொள்கிறோமோ அவ்வளவுக்கு நாம் வாழ்க்கையை ரசிக்கிறோம் என்று அர்த்தம் கொள்ளலாம்.

பொறுமை..

- எம்முள் உருவாகும் தூண்டுதல்களை நிர்வகிக்கிறது
- கோபத்தைக் கட்டுப்படுத்துகிறது
- மோசமான தவறுகளைத் தவிர்க்க உதவுகிறது

பொறுமை....

- இரக்கத்தை ஊக்குவிக்கிறது
- முன்னோக்கைப் பெற உதவுகிறது
- முதிர்ச்சியை அளவிடுகிறது

பொறுமை.....

- தனிப்பட்ட சக்தியை அதிகரிக்கிறது
- மன அழுத்தத்தை குறைக்கிறது
- உறவுகளை மேம்படுத்துகிறது.

மொத்தத்தில் சொல்வதானால் பொறுமையாக இருப்பது வெற்றிகரமான வாழ்க்கைக்கும்இ அதிக மகிழ்ச்சிக்கும்இ திறம்பட சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் மன அமைதியை உணர்வதற்கும் உதவுகிறது.

ஏமாற்றங்களும் எதிர்பாராத மாற்றங்களும் நிகழும் இந்த நிரந்தரமற்ற உலகில் நிம்மதியாக வாழ வேண்டுமானால் பொறுமை காப்பது கட்டாயமாகும்.

## மொ/பகினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்கள் இம்முறையும் சாதாரண தர பரீட்சையில் சாதனை

(ஏ.எச்.எம். சிஹார்)

2021 ம் நடைபெற்ற பரீட்சையில் மொ/பகினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்கள் மொனறாகலை மாவட்டத்தில் தமிழ் மொழி மூலத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அதனடிப்படையில் எம்.ஏ.எம் அப்லல் மற்றும் எம்.ஐ இப்பத் பானு 8A,B சித்திகளையும்.. எம். என் நப்லான் 7A, 2B திறமைச் சித்திகளையும், இல்மா 6A,2B,C, நுஸ்ஹா 6A,2B,C மற்றும் நுஹா 6A,3B மாணவிகள் சிறந்த பெறுபோறுகளை பெற்றுள்ளனர்.




அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டம் அதன் தலைவர் லுக்மான் சஹாப்தீன் தலைமையில் நாரஹேன்பிடியிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக அரசு அமுல்படுத்த உத்தேசித்துள்ள மாற்றங்களும் சிறுபான்மைக்களும் பற்றி ஆராயப்பட்டது.அமைப்பின் முக்கியஸ்தர்களான என்.எம் அமீன்,அஹ்மத் முனவ்வர்,சாம்நவாஸ் உட்பட மூக்கியஸ்தர்களைப் படங்களில் காணலாம்.

(ஏ.எம். நவாஸ்)

## கொழும்பு அல் - ஹிக்மா கல்லூரியில் மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம்



(ராபி சிஹாப்தீன்)

கொழும்பு அல் - ஹிக்மா கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களில் தேவையுடையவர்கள் என பாடசாலை முகாமைத்துவத்தினால் அடையாளங் காணப்பட்ட மாணவர்களுக்கான சத்துணவு மற்றும் காலை உணவு வழங்கும் வேலைத்திட்டம் அல் ஹிக்மா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இம்மாதம் 21ஆம் திகதி உத்தியோபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதாக அல் ஹிக்மா கல்லூரி (தேசிய பாடசாலை) பழைய மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஸாதிக் ஷிஹான் தெரிவித்தார்

அடையாளங் காணப்பட்ட மாணவர்களுக்கான சத்துணவு மற்றும் காலை உணவு வழங்கும் வேலைத்திட்டம் முதற்கட்டமாக 50 மாணவர்களுக்காக உணவு வழங்கி வைக்கப்பட்டது. பாற்சோறு, சோறு, கடலை, பாசிப்பயறு, கௌபி, நூடுல்ஸ் போன்ற உணவுகள் வழங்கப்படுகின்றமை விஷேட அம்சமாகும்.

இதற்கான ஆவணங்கள் பாடசாலை முகாமைத்துவத்திடம் உத்தியோபூர்வமாக கையளிக்கும் நிகழ்வில் கல்லூரி அதிபரும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமான மஹ்சூர் முஸ்தபா பழைய மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஸாதிக் ஷிஹான் உத்தியோக பூர்வமாக ஆவணங்களை கையளித்தார்.

மாணவ மாணவிகளின் கல்வி மற்றும் சுகாதார முன்னேற்றத்தை கருத்திற் கொண்டு அவசரமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தின் பிரகாரம் முதற்கட்டமாக ஆறு மாதங்களுக்கு, வாரத்தில் திங்கள் முதல் வியாழன் வரை நான்கு நாட்கள் என்ற அடிப்படையில் மாதத்தில் சுமார் 16 நாட்கள் உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் பழைய மாணவ, மாணவிகள், நலன்விரும்பிகள் மேற்படி திட்ட பொறுப்பாளர் எம் எஸ் எம் ஹஸன் (0777310732), பொதுச் செயலாளர் ஸாதிக் ஷிஹான் (0773112561) ஆகியோரை தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

## நௌபல் பாரி நினைவாக கத்தமுல் குர்ஆன்!

சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தின் இணைச்செயலாளராக பணிபுரிந்து அண்மையில் காலமான அல்ஹாஜ் எம். நௌபல் பாரி நினைவாக கத்தமுல் குர்ஆன் வைபவம் எதிர்வரும் 29 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு வெள்ளவத்தை லிலி அவனியில் உள்ள சோனக இஸ்லாமிய கலாச்சார நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தின் தலைவர் அல்ஹாஜ் உமர் காமில் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வு ஏ.ஏ.எம் மர்லின் மண்டபத்தில் நடைபெறும். மறைந்த மர்ஹூம் நௌபல் பாரி நினைவாக கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் இடம்பெற்று தமாமும் இடம்பெறும்.

## "புத்திலக்கியத்தளம" கவிதை நூல் அறிமுக விழா!

"புத்திலக்கியத்தளம்" கலை இலக்கிய நண்பர்கள் சந்திப்புவெளி ஸ்தாபிப்பும் முல்லைமுஸ்ரிபாவின் வரைபட மற்றவர்களின் காலடி கவிதை நூல் அறிமுகமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (04) மாலை 3.00 மணிக்கு புத்தளம்,தில்லையாடி, அல்காஸிம் சிற்றி றிஷாட் பதியுதீன் ம.வி. கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மூத்த இலக்கிய ஆளுமை, மேனாள் பிரதிக்கல்விப்பணிப்பாளர் கலாபூஷணம் ஜவாத் மரிக்கார் தலைமை தாங்குவார். நிகழ்வில் ஏற்பாட்டுரையை கவிஞர் மன்கலைத்தென்றல் எச். எம்.சுஹைப் வழங்குவார். அறிமுகவுரையை கவிஞர் முல்லை றிஸானா நிகழ்த்துவார். கவிதைத்திறனாய்வை மூத்த இலக்கிய ஆளுமை,மேனாள் அதிபர் திரு நாகராஜா முன்வைப்பார்.

நூல்நயவுரையை கவிஞர் அஷ்ஷெய்க் பஸ்லுல் பாரிஸ் நளீமி வழங்குவார்.கவிஞர் கலைவாருதி ஹாஜா அலாவுதீன் கவிதை வாசிப்பை நிகழ்த்துவார்.ஏற்புரை மற்றும் கலை இலக்கிய நண்பர் சந்திப்பு வெளி ஸ்தாபகவுரையை முல்லை முஸ்ரிபா வழங்குவார்.

நிகழ்வை எஸ்.எச்.ஏ.ஹாதி (தீனி) நெறிப்படுத்துவார். இலக்கியவாதிகள்,கல்விப் புலம் சார்ந்தோர்,சமூகாபிமான ிகள்,பிரமுகர்களெனப்பலரும் கலந்து கொள்ளும் மேற்படி நிகழ்வில் பிரதேசப் பாடசாலைகளுக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மு.கா. ரவூப் ஹக்கீம் பஷீருக்கு அனுதாபம் தெரிவிப்பு



(உமர் அறபாத்)

முன்னாள் அமைச்சர் பசீர் சேகு தாவூத் தாயார் அவர்களின் மறைவுக்கு நேரில் சென்று தனது அனுதாபத்தினை இன்று தெரிவித்தார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் றவூப் ஹக்கீம்...

இவ்விஜயத்தின் போது முன்னாள் இராஜாங்க அமைச்சர் செய்யித் அலிஸாஹீர் மௌலானா மற்றும் நகர சபை முதல்வர் ஆ.ளு.நழீம் ஹாஜியார் அவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொது சேவை மதிப்புகள் மற்றும் புலனாய்வு அறிக்கையிடல் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை



பொது சேவை மதிப்புகள் மற்றும் புலனாய்வு அறிக்கையிடல் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் புலனாய்வுக் கட்டுரைகளை எழுதுவதற்காக 25 மாவட்டங்களிலிருந்து ஊடகவியலாளர்கள் சுதந்திர ஊடக இயக்கத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டது.

பயிற்சியின் பின்னர் இதில் பலரும் பல்வேறு விதமான பிரச்சினைகளை தலைப்பாக வைத்து புலனாய்வுக் கதைகளை முன்வைத்தனர்.

இன்றைய காலத்தில் தாடேட்டத்தொழிலாளர்களின் பிரச்சினைகள் பலராலும் பேசப்பட்டு வருகின்றது. இதனை அடிப்படையாக வைத்து நியூஸ்பிளஸ் செய்தி ஊடகவியலாளர் அப்ரா அன்சார் இனால் "இருப்புக்கள் கேள்விக்குறியாகியுள்ள மொனராகலை தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கை" எனும் தலைப்பில் புலனாய்வுக் கதை எழுதப்பட்டது.

புலனாய்வுக் கதைகளை எழுதிய அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் சான்றிதல் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த நவம்பர் 24ஆம் திகதி கொழும்பு கிரேன்ட் ஒரியன்டல் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் புலனாய்வுக் கதைகளை எழுதிய ஊடகவியலாளர்களுக்கு தலா 25,000 ரூபா பணத்தொகையும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பகினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவி அஸ்ரா அகில இலங்கை ரீதீயில் போட்டியிட தகுதி பெற்றுள்ளார்

மொனராகல பகினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லுரியில் தரம் 12 இல் கல்வி கற்கும் ஏ.எம்.எப். அஸ்ரா என்ற மாணவி ENGLISH DAY COMEPETION 2022 CURSIVE WRITING போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்று, அகில இலங்கை ரீதியில் போட்டியிடுவதற்கு தகுதி பெற்றுள்ளார், இதற்காக எம்.எப். றிஸானா ஆசிரியை வழிகாட்டியாக செயற்பட்டுள்ளார்.

தரம் 8 இல் கல்வி கற்கும் எம்.ஆர். மஹீஸா என்ற மாணவி ஊவா மாகாண விஞ்ஞான தினப் போட்டியில், விஞ்ஞான புனைக்கதைப் போட்டி பிரிவில் 3ம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதற்கான வழிகாட்டி ஆசிரியராக இ. இருத்சலினி ஆசிரியை காணப்பட்டுள்ளார்.

# இலக்கிய பாகத்தில் மஷூறா



ஜெஸீமா முஜீப், மருதமுனை

1979 முதல் இலங்கை வானொலியில் செல்வி மஷூறா.ஏ.மஜீத் என்ற பெயரில்எழுத ஆரம்பித்த.

இவர் மஷூறா சுஹூறுத்தீன்





மற்றும் கலைததென்றல், பாரதிப் பிரியா, ஆஷா, சித்ராஜித் போன்ற புனைப்பெயர்களிலும் எழுதியவராவார். பாரதிப் பிரியா என்ற பெயரில் அதிக படைப்புகள் எழுதியவர். தற்போது சம்மாந்துறை மஷூறா என்ற பெயரில் நிலைத்திருக்கிறார்.

மாவடிப்பள்ளி கமு அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார்.

## வெற்றிகள்

பிரதேசம், மாவட்டம், மாகாணம் என பல மட்டங்களில் வெற்றியீட்டியிருப்பினும், தேசியமட்டத்தில் ஏழு தடவைகள் வெற்றி பெற்றிருக்கிறார். 1991ல் தே.இ.சேவை மன்றத்தின் பாடலாக்கப்போட்டியில் சிறப்புப் பரிசு,1993ல் சுதந்திர இலக்கிய விழாவில் பாடலாக்கத்தில்

பாராட்டுப்பரிசு, 1997 ல் கல்வியமைச்சு நடத்திய கவிதைப்போட்டியில் பாராட்டுப்பரிசு,2007ல் ஜனவபோத கேந்திரேயா நடத்திய நாடகப்போட்டியில் பணப்பரிசுடன் தேசிய மட்ட தயாரிப்பாளர் விருது, 2010 ல் கல்வியமைச்சு நடத்திய சிறுகதைப்போட்டியில் அதிவிஷேட வெற்றி, 2011 ல் இலங்கையர்கோன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பரிசு, 2016 ல் கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய கையெழுத்துப்பிரதிப் போட்டிகளில் கவிதைக்காக மூன்றாம் இடமும் பெற்றிருக்கிறார்.

## சுய வெளியீடுகள்

நிறைமதி சஞ்சிகை, அக்கினி போன்ற கவிதைச்சஞ்சிகைகள், புன்னகை நினைவுமலர், யௌவனம் சஞ்சிகை, குதூகலம், அலவாக்கரை, புதையல், பொக்கிஷம், நாற்று, ஒளியைத்தேடும் நிழல்கள், சுடர், பசுமையின் நினைவுகள், நந்தவம், மொட்டு, உப்பட்டி, பூந்தாழி, ஓட்டோகிராப், பொகில் சஞ்சிகைகள் மற்றும் என் இனிய வாழை மரமே,ஆசிரியர்,பேசும்பொற் சித்திரங்கள்,பாடும் வானம்பாடிகள் போன்ற மாணவர்கள் கவிதைத் சதொகுதிகளையும்,விதியை வென்றவள் மாணவர் சிறுகதைத் தொகுதியையும் வானவில் சித்திர சஞ்சிகையையும் கையெழுத்து,ரோணியோ,அச்சு வெளியீடுகளாக முப்பது வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறார்.

## கவிதைத்தொகுதிகள்

1986ல் இஸ்லாமிய இலக்கியப்பணியக வெளியீடாக வந்த "எழுவான் கதிர்கள்"1986ல் யாழ் பெண்கள் ஆய்வுவட்ட வெளியீடாக வந்த "சொல்லாத சேதிகள்"மூன்றாம் உலகப்பெண்கள் தொகுப்பிலும்,1997 ல் கொழும்பு ஹிசாம் பப்ளிகேசனின் "ஓடும் நதியைப்பாடும் மலர்கள்"தொகுதியிலும்,1999,2009களில் மட்டக்களப்பு சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலைய வெளியீடுகளான, உயிர்வெளி, கண்ணாடி முகங்கள் தொகுதிகளிலும், 2004ல் மருதமுனை புதிய படிப்பு வட்டவெளியீடான மருதூர்க் கொத்தன் மீள்தலிலும், 2007ல் சென்னை மாற்று வெளியீடான "பெயல் மணக்கும் பொழுத" தொகுப்பிலும், 2014ல் ஹிஸ்புள்ளாஹ் பவுண்டேசன் வெளியீடான "நதியைப்பாடும் நந்தவனங்கள்" தொகுப்பிலும், 2017 ல் செல்லமுத்து வெளியீட்டக வெளியீடான "1000 கவிஞர்கள் கவிதைகள்" சர்வதேச தொகுதியிலும், 2020 இல் இந்தியா கேப்டன் யாஸீன் பதிப்பக வெளியீடான "சுருக்குப் பை" தொகுப்பிலும் இவரது கவிதைகள் வெளிவந்திருக்கின்றன.

கடந்த வருடம் இவரது தொன்னூறு கவிதைகளடங்கிய "நதிகளின் தேசிய கீதம்"கவிதைத்தொகுதி வெளிவந்தது.

தவிர அறுபத்து மூன்று முஸ்லிம் பெண்களின் கவிதைகளடங்கிய "சுட்டுவிரல்" விதைத்தொகுதியையும் தொகுத்து Srilanka pen club வெளியிட்டிருந்தார்.இதுவே இலங்கையில முதலில் வெளியான முஸ்லிம் பெண்களின் தொகுதியாகும்.

## விருதுகள்

2002ல் தென்கிழக்கு ஆய்வு மையமும் இஸ்லாமிய ஆய்வமையமும் "இளம் இலக்கிவாதி"விருது,2004 ல் தினச்சுடர் பத்திரிகை நிறுவனம் Best poet விருது,2007 ல் ஜனவபோத கேநதிரேயா நாடகதயாரிப்பாளர்க்கான தேசிய விருது,

2008 ல் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்திப் பிரிவின் விருது,2009ல் சு.மு.மீடியா "இலக்கிய நிலா"விருது,

2009 ல் அகில இன நல்லுறவு ஒன்றியம் "சாமசிறீ கலாஜோதி"விருது2009ல் பிரதேச சாகித்திய விருது,

2011ல் மலையக கலை கலாசார சங்கத்தின்" இரத்தின ஜோதி" விருது, 2014ல் ஹிஸ்புள்ளாஹ் பவுண்டேசனின் பொற்கிழியுடன் விருது, 2015 இல் "ஒற்றுமைப்பாலம்" விருது, 2016ல் இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் உலக இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாட்டு விருது, 2017 இல் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் "கலைஞர் சுவதம்" விருது போன்ற இலக்கியத்திற்கான விருதுகளுடன்,

2006ல் சாரணிய சேவைக்காக, அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சங்கத்தில் மாவட்ட விருது,2007ல் சென்ஜோன் அம்பியுலன்ஸின் முதலுதவி சேவைக்கான சர்வதேச விருது,2013ல் சுற்றாடல்நேய சேவைக்காக சுற்றாடல் அமைச்சின் தேசிய விருது,2014ல் கல்வி சேவைக்காக கல்வியமைச்சின் "பிரதீபா பிரபா"விருது,2018ல் பொது சேவைக்காக "தேசகீர்த்தி"விருது என்பன பெற்றிருக்கிறார்.

இவ்வருடம்மூ2021க்கான கிழக்குமாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இலக்கிய. வித்தகர் விருதும் பெற்றுள்ளார்.

இலக்கிய அமைப்புகளில்.

நிறைமதி கலையிலக்கிய மன்ற ஸ்தாபகத் தலைவராகவும்,சம்மாந்துறை தமிழ்ச்சங்க துணைச் செயலாளராகவும்,மனிதநேய நற்பணி மன்றத்தின் கலைகலாசாரப் பணிப்பாளராகவும் சிரேஸ்ட உபதலைவராகவும், குயிலோசை அமைப்பின் அங்கத்தவராகவும்,நிநெ உடரடி - ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பு ஸ்தாபகத்தலைவராகவும்,கல்முனை பிரதேச "நாணல்" பெண்கள் இலக்கிய அமைப்பின் செயலாளராகவும் செயற்பட்டு வருகிறார். படர்க்கைகள் இணையம் அமைப்பின் உபதலைவராகவும் இயங்கியிருக்கிறார்.

Srilanka pen club ஆற்றலுள்ள பெண்களூாக்கான அமைப்பினை நிறுவி ஸ்தாபகத்தலைவராக இயங்கி வருவதுடன் காத்திரமான செயற்பாடுகள தெடர்கிறார்.

## பதிவுகள்

1986ல் 'Island"news pepar இல் கே.எஸ்.சிவகுமாரன் எழுதிய The awakening of Tamil women கட்டுரையில் சிலாகிக்கப்பட்டதே இவரது முதல் பதிவு. 1987ல் கந்தையா ஸ்ரீகணேஷன் வார முரசொலியில் எழுதிய கட்டுரையிலும், 1989ல் கலைவாதி கலீல் வெளியிட்ட றோணியோக்கள் வாழுமா நூலிலும், 1992ல் கலாசார அலுவல்கள் அமைச்சின் வாழ்வோரை வாழ்த்துவோம் வெளியீட்டிலும்,1998ல் கலாசார அலுவல்கள் அமைச்சு வெளியீடான அம்பாறைமாவட்ட முஸ்லீம்கள் வரலாறு நூலிலும்,2000ல் மல்லிகை சஞ்சிகையிலும்,2000ல் துரை மனோகரன் எழுதிய இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சி நூலிலும்2004ல்புன்னியாமீன் வெளியிட்ட இலங்கை முஸ்லீம் எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள் கலைஞர்கள் விபரம் நூலிலும்,2009,2012களில் பிரதேச சாகித்திய விழா மலரான பட்டறை சஞ்சிகைகளிலும்,2011ல் மலையக கலைகலாசார சங்க வெளியீடான முத்துக்கள் முப்பது சிறப்பு மலரிலும், 2012ல் யாத்ரா சஞ்சிகையிலும், 2017ல் ஜீவநதி 100 பெண்கள் சிறப்பு மலரிலும்,2019ல் தமிழா வலையமைப்பின் பெண்கள் முதன்மைகளும் எழுத்தாளர்களும் நூலிலும்,2000ல் மூன்றாவது மனிதன் சஞ்சிகையிலும், 2020ல் நூருல் ஐன் நஜ்முன் ஹசைன் தொகுத்த மின்னும் தாரகைகள் நூலிலும் இவர் பற்றிய பதிவுகள் இடம்பெற்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்.









கட்டாரிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பிரபல எழுத்தாளர்களான நஜ்முல் ஹூஸைன் நூருல் ஏன் தம்பதியினர் அங்கு இடம்பெற்ற இலக்கிய நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.இலாரங்கை புலம்பெயர் அமைப்பின் முக்கியஸ்தர் அக்ரம் பஷீர் உட்பட்ட பலர் இதில்கலந்து கொண்டனர்.

## பகினிகஹவெல மாணவி அஸ்ரா அகில இலங்கை ரீதீயில் போட்டியிட தகுதி!

மொனராகல பகினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லுரியில் தரம் 12 இல் கல்வி கற்கும் ஏ.எம்.எப். அஸ்ரா என்ற மாணவி ENGLISH DAY COMEPETION 2022 CURSIVE WRITING போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்று , அகில இலங்கை ரீதியில் போட்டியிடுவதற்கு தகுதி பெற்றுள்ளார், இதற்காக எம்.எப். றிஸானா ஆசிரியை வழிகாட்டியாக செயற்பட்டுள்ளார்.

தரம் 8 இல் கல்வி கற்கும் எம்.ஆர். மஹீஸா என்ற மாணவி ஊவா மாகாண விஞ்ஞான தினப் போட்டியில், விஞ்ஞான புனைக்கதைப் போட்டி பிரிவில் 3ம் இடத்தைப் பெற்றுள்ளார்,. இதற்கான வழிகாட்டி ஆசிரியராக இ.ருத்சலினி ஆசிரியை காணப்பட்டுள்ளார்.



# அதிகாரப் பகிர்வு விடயத்தில் முஸ்லிம் புத்திஜீவிகள் செயற்பாட்டில் இறங்க வேண்டும்

## வை.எல்.எஸ் ஹமீட் தெரிவிப்பு!



ஜனாதிபதி அதிகாரப் பகிர்வு விடயத்தில் சாதகமான கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். சூழ்நிலைகள் பலவந்தப்படுத தினாலேயொழிய ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெற வாய்ப்பிருக்கிறது. ஆனாலும் உரிய காலத்திற்குமுன் நடாத்தமுடியாது.

எது எவ்வாறிருந்தபோதிலும் ஜனாதிபதித் தேர்தலை மனதிற்கொண்டு ஒரு தீர்வினைத் தமிழ்தரப்பிற்கு வழங்க ஜனாதிபதி முனைப்புக்காட்டுவது புரிகிறது. 2ஃ3 பெரும்பான்மை கிடைக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் எதையும் இப்பொழுது அறுதியிட்டுக் கூறமுடியாது.

இந்நிலையில் அதிகாரப்பகிர்வு தொடர்பில் முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ன? முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் இதுவரை தெளிவான நிலைப்பாடுகள் இல்லை. அதிகாரப்பகிர்வு என்பது வட-கிழக்கு இணைப்பு, பிரிப்பு சம்பந்தமானது் என்பதே பலரது பார்வையாக இருக்கின்றது. அதற்கு அப்பால் எதுவும் தெரியாது் அதுப்பற்றி சிந்திப்பதற்கும் ஆயத்தமில்லை.

இதில் மிகவும் பரிதாபகரமான நிலை என்னவென்றால் வட-கிழக்கிற்கு வெளியில் வாழும் சாதாரண முஸ்லிம்கள் மட்டுமல்ல, நான் சந்தித்த சில புத்திஜீவிகள்கூட, அதிகாரப்பகிர்வு வட-கிழக்கிற்கே தாக்கம் செலுத்தக்கூடியது் அதற்கு வெளியே அல்ல் என்றுதான் நினைக்கிறார்கள். அதிகமான மலையகத் தலைவர்களும் அவ்வாறே நினைக்கிறார்கள். வட-கிழக்கைவிட வெளியே வாழுகின்ற சிறுபான்மைகள் மீதுதான் அதிகாரப்பகிர்வு பாரதூரமான எதிர்மறைத் தாக்கத்தைச் செலுத்தப்போகிறது் என்பதை ஏனோ அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதிகப்பட்டச அதிகாரப்பகிர்வு முஸ்லிம்களுக்கு மிகவும் ஆபத்தானது. சமஷ்டி அதைவிட பேராபத்தானது் என்பது தொடர்பில் சமூகத்திற்கு எந்த விழிப்புணர்வும் இல்லை. கண்மூடித்தனமாக அரசியல் தலைமைகளை நம்பும் ஓர் சமூகம் நம் சமூகம்.

சமூகத்தில் எதுவித அக்கறையுமற்ற அரசியல் தலைவர்களைக்கொண்ட சமூகம் நாம். தலைவர் மறைந்து 22 வருடங்கள் கடந்துவிட்டன. இன்னும் தலைவரின் பெயரைச்சொல்லி அரசியல் செய்யும் கட்சிகள் சமூகத்திற்காக தீர்த்துக்கொடுத்த பிரச்சினை எதுவுமில்லை.

முஸ்லிம்களில் அன்றி தமிழ்த்தரப்பில் அதிக அக்கறைகொண்ட முஸ்லிம் தலைவர்களைக்கொண்ட சமூகம் நாம். தமிழர் கோருகின்ற வட-கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கத்தை வழங்க இந்தியாவுக்கு அழுத்தம் வழங்க, கடிதம் எழுதி கையொப்பம் வைக்கமுனையும் தலைவர்களைக்கொண்ட சமூகம் நாம்.

கல்முனையைக் கூறுபோட எத்தனிக்கும் தமிழ்த்தலைவர்களிடமிருந்து கல்முனையைப் பாதுகாத்துத்தர, அதற்காக உருப்படியான ஒரு பேச்சை பாராளுமன்றத்தில் பேசுவதற்குக்கூட வக்கற்ற தலைவர்களைக்கொண்ட சமூகம் நாம்.

இந்நிலையில், ஏற்கனவே, நல்லாட்சியில் வரையப்பட்ட யாப்பு வரைபில் பல விடயங்கள் முஸ்லிம்களையும் மலையகத் தமிழர்களையும் பாதிக்கக் கூடியாதாய் இருக்கின்றன. சமஷ்டிக்கும் மேலான அதிகாரப்பகிர்வு அதில் முன்மொழியப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக அச்சந்தர்ப்பத்தில் நிறைய எழுதியிருக்கின்றேன். பல கருத்தரங்குகள் நடாத்தியிருக்கின்றேன்.

எனவே, அதகாரப்பகிர்வுக்கான முஷ்தீபுகள் நடைபெறும் இச்சந்தர்ப்பத்தில் அரசியல்தலைமைகளை நம்பி முஸ்லிம் சமூகம் ஏமாந்துவிடக்கூடாது. நாம் தமிழர்களின் அபிலாசைகளுக்கு எதிரானவர்களல்ல, ஆனால் அது முஸ்லிகளை ஓர் இருண்ட யுகத்திற்குள் தள்ளிவிடக்கூடாது.

ஏதோ ஓர் தீர்வுத்திட்டம் வரப்போகிறது. அது நிறைவேறுமா? நிறைவேறாதா? என்பது வேறுவிடயம். அவ்வாறு தீர்வுத்திட்டம் வெளிவரும்போது நாம் தடுமாறிக்கொண்டிருக்க முடியாது. 21 வது திருத்தத்தில் அரசியலமைப்பு சபையில் ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் வரக்கூடிய விதத்தில் ஒரு வரியை சேர்க்க வக்கற்ற தலைவர்கள்தான் நம் தலைவர்கள். கோட்டாவின் 20 இன் பாராளுமன்ற சபையில் ஒரு முஸ்லிம் வருவதை உறுதிப்படுத்தக்கூடிய சரத்து இருந்தது. ( அந்த சபைக்கு அதிகாரம் இருந்ததா? இல்லையா? என்பது வேறுவிடயம்)

இது தொடர்பாக விரிவாக வேறாக எழுதுகின்றேன். எனவே, இந்த சூழலில் புத்திஜீவிகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒன்றுசேரவேண்டும். தீர்வுத்திட்டத்தில் நமது உரிமைகளைப் பாதுகாக்கும் அம்சங்கள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பதை அடையாளம் காணவேண்டும். பின்னர் பல பிரதேச புத்திஜீவிகளை இணைத்த ஒரு சம்மேளனம் உருவாக்கப்பட்டு அவற்றில் ஒரு பொது நிலைப்பாடு எட்டப்பட வேண்டும்.

அதனை முஸ்லிம் கட்சிகளிடம் சமர்ப்பித்து அதுவே அவர்களின் நிலைப்பாடாகவும் இருக்கவேண்டும். அதேபோன்று, அரசிடமும் எதிர்க்கட்சிகளிடமும் அந் நிலைப்பாட்டை சமர்ப்பித்து அழுத்தம் கொடுக்கவேண்டும்.

தயவுசெய்து பஸ் போனபின் கைகாட்டாமல் இப்பொழுதே புத்திஜீவிகள் செயற்பட முன்வரவேண்டும்.

# இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு விஜயம்



(பி.கேதீஸ்)

இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் ஸ்ரீ வினோத் கே ஜேகப் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அங்குள்ள சிரேஷ்ட முகாமைத்துவ குழுவினருடன் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் பாரத் அருள்சாமி, ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் விஜேசிங் ஆகியோர் கலந்துக்கொண்டனர். தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தை மேம்படுத்துவது இந்திய அரசின் தற்போதைய அபிவிருத்தி திட்டங்களில் ஒன்றாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வீரமுனை பொது நூலகம் திறந்து வைப்பு!



(கி. ஷனுஸ்காந்)

பல வருட வீரமுனை மக்களின் கனவாக இருந்து வந்த வீரமுனை பொதுநூலகம் நேற்று முன்தினம் (25) மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இதில் பிரதம அதிதியாக ஏ.எம்.எம். நௌஷாட், கோவிந்தசாமி(பிரதேச சபை உறுப்பினர்), ஸ்ரீ சிந்துயாத்திரை பிள்ளையார் ஆலய பிரதம குருக்கள் நிமலேஸ்வர குருக்கள்,ஏனைய பிரதேச சபை உறுப்பினர்கள், வீரமுனை கிராமசேவகர்கள், ஸ்ரீ சிந்துயாத்திரை பிள்ளையார் ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் வீரமுனை வாழ் பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்ததோடு பல்வேறுபட்ட நிகழ்வுகளும் நடைபெற்றது.

# வைத்திய பரிசோதனை முகாம், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு!




(எச்.எம்.எம்.பர்ஸான்)

வைத்திய பரிசோதனை முகாமும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வும் சனிக்கிழமை (26) வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இலங்கை குடும்பத்திட்ட சுகாதார சேவை நிலையத்தின் மட்டக்களப்பு நிலையம், கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து இந்த நிகழ்வை நடாத்தியது.

சுகாதார சேவை நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் எஸ்.எச்.இம்தியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வாழைச்சேனை மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். ரீ.எம்.நஜீப் கான், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் மனநல வைத்தியர் டான் சௌந்தரராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்டோர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன், தொற்றும், தொற்றா நோய் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன், தெரிவு செய்யப்பட்ட பதினைந்து கர்ப்பிணித் தாய்மாருக்கு இருபத்தையாயிரம் ரூபாய் பெறுமதியான பிரசவப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் மாணவர்களுக்கு இலவசமாக தலைக்கவசம் வழங்கி வைப்பு



(செ. திவாகரன்)

"எமது பிள்ளைகள் பொருமதியானவர்கள் " என்ற தொனிப்பொருளின் கீழ் நுவரெலியா பிரதேசத்தின் தமிழ் ,சிங்கள பாடசாலைகளுக்கு தலைக்கவசம் இன்றி செல்லும் மாணவர்களின் பெயர் விபரங்களை திரட்டி மாணவர்களின் நலன் கருதியும் , வீதி விபத்தில் பாடசாலை மாணவர்களின் உயிர்காக்கும் நோக்குடன் அலியான்ஸ் காப்புறுதி நிறுவனம் மற்றும் பொலிஸாரின் ஆதரவுடன் தலைக்கவசத்தின் பயன்பாடு மற்றும் தலைக்கவசம் குறித்த விழிப்புணர்வுகளையும் மாணவர்களுக்கு வழங்கி ,கடந்த வெள்ளிக்கிழமை (25) நுவரெலியா பொலிஸ் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி , பொலிஸ் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி இணைந்து மாணவர்களுக்கு இலவசமாக தலைக்கவசம் வழங்கினர்.

அலியான்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் நாடலாவிய ரீதியில் சமூக வேலைத்திட்டமாக தலைக்கவசம் விநியோகம் செய்துவருக்கிறமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் சர்வதேச பலஸ்தீன ஒருமைப்பாட்டு தின கருத்தரங்கு


சர்வதேச பலஸ்தீன் ஒருமைப்பாட்டு தினம் வருடாந்தம் நவம்பர் மாதம் 29 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு இலங்கை பலஸ்தீன் ஒருமைப்பாட்டு இயக்கம் கொழும்பில் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

பலஸ்தீனுக்கு நீதி எனும் தொனிப் பொருளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்திலுள்ள சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தின் ஒலிம்பஸ் மண்டபத்தில் நவம்பவர் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இலங்கை பலஸ்தீன் ஒருமைப்பாட்டு இயக்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்தல்லா சைத், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, இலங்கைக்கான ஐ.நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர், சர்வதேச உறவுகள் தொடர்பான நிபுணர் குசும் விஜேதிலக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர். இலங்கை பலஸ்தீன் ஒருமைப்பாட்டு இயக்கத்தின் செயலாளர் பௌசர் பாரூக் நன்றியுரை நிகழ்த்துவார். இந் நிகழ்வில் சகலரையும் கலந்து கொண்டு பலஸ்தீன விடுதலைக்காக குரல் கொடுக்குமாறு ஏற்பாட்டுக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.



# ரணிலின் அழைப்பில் எழும் ராஜதந்திரச் சமர்!





சுஜப் எம்.காசிம்

சகலரையும் ஒருதாய் உணர்வில் இணைக்கும் தீர்வுத் திட்டத்துக்கு உழைக்க ஜனாதிபதி தயாராகிறார். "ஏனையோர் தயார்தானா?" எனவும் வினவுகிறார். எல்லோரையும் எப்படி ஒருதாய் உணர்வில் இணைப்பது? அவ்வாறானால், அரசியலமைப்பில் சில விடயங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தனிச்சிறப்புக்கள் நீக்கப்பட வேண்டும். பெரும்பான்மை இன கோட்பாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள தனிச்சிறப்பு, சிங்கள மொழிக்குள்ள விஷேட முன்னுரிமை, மத்திய அரசாங்கம் கையாளும் உச்ச அதிகாரம், அதிகாரங்களைப் பகிர்வதில் உள்ள அலட்சியம், காணிப்பங்கீடுகளில் காட்டப்படும் பாரபட்சம் இன்னும் இதுபோன்றன இல்லாமலாக்கப்பட்டால்தான், ஒரே தாயின் நீதி எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைக்கும். நூறு பிள்ளைகள் இருந்தாலும் தாயின் பங்கீட்டில் பாரபட்சம் இருக்காது. அவ்வாறு இருந்தாலும் தாயின் இயலாமையை பிள்ளைகள் புரிந்துகொண்டு செயற்படும்.

இந்நிலையை ஏற்படுத்தவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புறப்பட்டுள்ளார். இதைத்தானே எல்லோரும் முயற்சித்தனர். எந்த ஜனாதிபதிக்கும் இது முடியாமல் போய்விட்டதே! இருந்தாலும் இவர் உழைக்கவுள்ள சூழல் வேறுபட்டிருக்கிறது. பிரிவினையும் போரும், பகையும் நமது நாட்டவர்களை பசியால் பதம் பார்த்துள்ள சூழலிது. இந்தப் பசி வந்ததால் பத்தும் பறந்துவிட்டன.

யுத்தத்துக்காகக் கொட்டப்பட்ட நிதியைச் சேமித்து உள்நாட்டில் உற்பத்தியை ஊக்குவிக்கலாம். கையகப்படுத்தப்பட்ட காணிகள், காடுகள் வளர்ந்துள்ள காணிகளை மற்றும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட காணிகளை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தலாம். ஏன், கண்ணிவெடிகள் மிதக்கவிடப்பட்ட கடலையும் பொருளாதார நோக்குகளுக்காகப் பயன்படுத்துவது பற்றி யோசிக்கும் காலமும் இதுதான். வேறுபாடுகளை களைந்து, ஒரு தேசத்தவர்களாக இணையும் அரசியல் கலாசாரத்தில்தான் இவற்றை சாத்தியமாக்கலாம். தெற்குக் கடல், வடக்குக் கடலென வயிற்றுப் பசி பாரபட்சம் காட்டுவதில்லையே! காலி முகத்திடல் ஆர்ப்பாட்டங்களிலும் இந்த பாரபட்சங்கள் இருக்கவில்லையே!

எனவே, ஜனாதிபதியின் இந்த உழைப்புக்களுக்கு உரமூட்டும் பொறுப்புக்கள் சிறுபான்மை சமூகங்களிடமே உள்ளன. குறிப்பாக, தமிழர் தரப்புக்கு இதில் சில வரலாற்றுப் பொறுப்புக்கள் உள்ளன. கடந்த கால எந்த முயற்சிகளாலும் (ஆயுதம், அஹிம்சை) வெல்லப்படாத போன இலட்சியத்தை (தீர்வு) தட்டில் வைத்து தருவதற்கு ஜனாதிபதி எடுக்கும் முயற்சி இது. இதைத் தட்டிவிட முடியாது. இதனால், தமிழ் தரப்புக்கள் பொறுப்புதாரிகளாகப் பணியாற்றுவது அவசியம். பட்ஜட்டின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவளித்து ஜனாதிபதியை உற்சாகமூட்ட வேண்டிய தமிழ் தரப்பு, வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. ஆனாலும், ஐக்கிய மக்கள் சக்தியுடன் இல்லை என்பதை இவர்கள் வெளிக்காட்டியுள்ளனர்.

சிறுபான்மையினரின் அரசியல் பிரச்சினைகள் உள்ளிட்ட சகல விடயங்களிலும் எவ்விதப்பிடிக்கோ அல்லது அழுத்தங்களுக்கோ அடிபணியாமல் சிந்திக்கும் தலைவர் ரணில். இவ்வளவு காலமும் எட்டப்பட்ட முயற்சிகளை விடவும் ரணிலின் காலத்தில் முயற்சிக்கப் பட்டவைதான், தமிழர்களுக்கு ஓரளவாவது திருப்தியளித் திருக்கிறது. 2002 முதல் 2004 வரை இவரது அரசாங்கம் உச்சளவில் முயற்சித்து, ஏதோவொரு தீர்வுக்கு முயன்றதை சர்வதேசமே அறியும். கடந்த 2002 முதல் 2004 வரையான முயற்சிகள் தமிழ் ஈழத்துக்கான சாயலாகவே இருந்தன. இக்காலங்களில், தமிழர் தரப்பின் எல்லை தாண்டிய செயற்பாடுகள் தென்னிலங்கையின் கண்களில் குத்தியதையும் ஆயுத அமைப்பு இரண்டாகப் பிளந்ததையும் கற்றுக்கொண்ட பாடங்களாக தமிழர் தரப்புக் கருத வேண்டும்.

தென்னிலங்கையின் சகல அரசியல் தலைமைகளும் சமாதான தேசத்தையே விரும்புகையில், இனியும் பேரினவாதம் பிழைக்கப் போவதில்லை. இந்தப் பிழைப்புக்கள் காலி முகத்திடலில் எழுந்த அக்கினியில் சாம்பலாகிவிட்டன.

எனவே, ரணிலின் தீர்வுக்கான அறிவிப்பை பயன்படுத்த சிறுபான்மைச் சமூகங்கள் முன்வருதல் அவசியம். இருப்பினும், இவர்களின் முன்வருகைகள் சில முரண்பாடுகளால் பின்னகராது இருந்தால் சரிதான்.

தமிழர் தரப்பு தீர்வு வடக்கு, கிழக்கு இணைப்பை வலியுறுத்தியே, முன்வைக்கப்படும். இவ்விணைப்பில், முஸ்லிம் தரப்பு முரண்படும். இந்த இழுபறியை தென்னிலங்கை பயன்படுத்தும். இந்நிலைக்கு இம்முறை எவரும் இடம்வைக்கக் கூடாது.

எல்லோரும் ஏற்கும் தீர்வையே தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏற்குமென அக்கட்சி கூறுகிறது. ஆனால், எந்தத் தீர்வு தேவை? என்பதில் முஸ்லிம் தலைமைகளின் நிலைப்பாடு பூச்சியத்திலே உள்ளது.

முஸ்லிம்கள் விடயத்தில் விட்டுக்கொடுக்கவே முடியாதென முழங்கும் கிழக்குப் பூர்வீக அமைச்சர், விட்டுக்கொடுக்க முடியாதளவுக்கு எதை வைத்திருக்கிறார் என்பதை முன்வைப்பது அவசியம்.

உள்ளூராவுள்ள காணிப் பிரச்சினைகள் மாத்திரம் உரிமைப் பிரச்சினையாகாது. ஆளும், ஆளப்படும் சக்திகளிடம் அடிமையாகாத அதிகாரம், பறிபோகாத வளப்பங்கீடு, நிலையான வருமானம், பிடுங்கப்படாத பிரதிநிதித்துவங்களை கோருவதுதான் இருப்பை ஸ்திரமாக்கும்.

இவையெல்லாம் இலங்கையருக்கு சமமாக அதாவது, இன விகிதாசாரங்களுக்கு ஏற்ப வழங்கப்படுவதுதான் ஒரு தாயின் பார்வையாக இருக்கும்.

# வியப்பூட்டும் நிகழ்வுகள் அதிரடி முடிவுகள்
## களைகட்டும் கால்பந்து உலகம்



அப்ரித் வஸீர்



முழு உலகமும் அரேபிய தேசத்தின் மேல் கவனம் திரும்பியிருக்கும் நாட்கள் இவை. 22வது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடர் வெகு விமர்சையாகவும், பல விசித்திர நிகழ்வுகளுக்கு மத்தியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இம்முறை உலகக்கிண்ண போட்டிகள் பல நினைவுகளை சரித்திரத்தில் பதிக்கும் என்பதில் எவருக்குமே சந்தேகங்கள் கிடையாது.

நடை பெற்றுக்கொண்டிருக்கும் உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டியில் பல விசித்திர நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அவற்றை சுமந்து இந்த கட்டுரை வருகின்றது.

போட்டிகளின் ஆரம்பம் முதல் இன்று வரை ரசிகர்கள் நினைத்துபார்த்திராத பல வித்தியாசமான நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அதிலும் குறிப்பாக போட்டியின் முதல் நாள் ஆரம்ப நிகழ்வில் அமெரிக்க பிரபல நடிகர் மற்றும் அரை உடம்பு சேர்ந்து ஒரு அல்குர்ஆன் வசனம் கொண்டு போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டது சமூக வலைத்தளங்களில் பெரிதும் வரவேற்புக்கு மத்தியில் பாராட்டப்பட்டு பேசப்படுகிறது. இது மட்டுமன்றி, அரபியர்கள் என்றால் யார்? முஸ்லிம்கள் என்றால் தீவிரவாதத்தை பரப்பக் கூடியவர்கள் மாத்திரம் தான் என்ற சர்வதேசத்தின் பிழையான கண்ணோட்டத்தை புரட்டிப்போடும் அளவுக்கு கட்டார் அரசு மற்றும் ஒட்டு மொத்த கட்டார் குடிமக்களும் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் வீதி ஓரமாக பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்து அதன் மூலம் அவர்களது நன்னடத்தை மூலமாகவும் எடுத்துக்காட்டி ஒட்டு மொத்த சமூகத்துக்கும் ஒரு முன்மாதிரியை நிகழ்த்தி வருகின்றனர்.

ஆரம்ப நாள் முதல் இன்று வரை வியப்புக்களை அள்ளி தரும் போட்டிகளாகவே ஒவ்வொரு போட்டியும் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. போட்டியின் முதல் நாள் கத்தார்- ஈகுவடோர் அணிகள் மோதின.இதில் ஈகுவடோர் வெற்றி பெற்றிருந்தது.

இதை தொடர்ந்து கடந்த 22ம் திகதி சவூதி அராபிய மற்றும் அர்ஜென்டினா அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெற்றது. இதில் சவூதி அராபிய அணி 2 :1 எனும் வித்தியாசத்தில் வரலாற்று வெற்றியை நிலைநாட்டியது. இவ்வெற்றியை கொண்டாடும் நோக்கில் கடந்த நவம்பர் 23ம் திகதி சவூதி அரசாங்கம் முழு நாட்டிற்கும் விடுமுறை வழங்கியது மட்டுமன்றி சவூதி மன்னரால் அணியின் வீரர்களுக்கு விலை உயர்ந்த கார்கள் பரிசில்களாக வழங்கியமை உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

அடுத்த போட்டியாக 23ம் திகதி ஜேர்மனி மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு இடையில் நடைபெற்றன. இப்போட்டியில், 1:2 எனும் புள்ளியில் ஜப்பான் அணி வெற்றிபெற்று இரசிகர்களுக்கு மேலும் ஆர்வத்தை தூண்டி இருக்கிறது. இவ்வாறு இம்முறை பல போட்டிகள் புது அணிகளே போட்டியின் ஆட்டத்தை மாற்றி இரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகின்றது .

அதே தினத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்பெயின் மற்றும் கோஸ்தரிக்க அணிகள் மோதின. இதில் ஸ்பெயின் அணி 7 கோல்களை அடித்து 7:0 எனும் விகிதத்தில் அபார வெற்றியை ஈட்டி ஒட்டு மொத்த 2022 ஆம் பீபா உலகக் கிண்ணத்தில் அதி கூடிய கோல்கள் அடித்த அணியாக ஸ்பெயின் சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளது.

இதனை தொடர்ந்து 25ம் திகதி போர்த்துக்கல் மற்றும் கானாவுக் கிடையில் போட்டி நடைபெற்றது. இதில் கால்பந்தின் கதாநாயகன் என வர்ணிக்கப்படும் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் சிறந்த விளையாட்டின் மூலம் போர்த்துக்கல் அணி வெற்றியீட்டியது.

இதை தொடர்ந்து மெக்சிகோ மற்றும் ஆர்ஜெண்டீன அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் அர்ஜெண்டீன அணி வெற்றி பெற்று அர்ஜெண்டீன ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

அதே போன்று போலாந்து மற்றும் சவூதி அராபியவுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் போலந்து அணி வெற்றி பெற்றதை தொடர்ந்து சவூதி அராபிய ரசிகர்களின் நம்பிக்கை சிதறிப்போயுள்ளமை குறுப்பிடத்தக்கது.

விளையாட்டுக்கள் ஒரு பக்கம் இருக்க சமூக வலை தளங்களில் ஒன்றான ஐஸெவபசய இல் பிரபல கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரேனல்டோவுக்கான குழடடழறநசள எண்ணிக்கை 500மில்லியனையும் தாண்டி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. உலகிலேயே அதிகமான குழடடழறநசள கொண்ட சாதனையையும் இவர் படைத்துள்ளார்.

இவர் இதனை அடைவதற்கு பிரதான காரணமாக அமைவது இவரும் கால்பந்தாட்ட நட்சத்திரங்களில் ஒருவரான மெசியும் இணைந்து செஸ் விளையாடிக்கொண்டிருப்பது போல் வெளியிடப்பட்ட படமாகும் என குறிப்பிடப்பிட்டுள்ளது.

இது மட்டுமல்லாமல் ரொனால்டோ 5 உலகக்கோப்பையிலும் தொடர்ச்சியாக கோல் அடித்தவர் என்ற பெருமையையும்,சாதனையையும் தனதாக்கிக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.